
# கொலைக் கண்காட்சி

- பெ. நாயகி

## 1



"உன் ரேவதி தற்கொலை பண்ணிக்கிட்டாடா..." என்றான் பால்கி

மேசை நிறைய பொழுது போக்கு அறிவியல் புத்தகங்கள் இறைந்து கிடந்தன. அந்தக் குவியலுக்கிடையில் நானும் இருக்கிறேன் என்று நிமிர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சின்னக் கடிகாரம் மணி பத்தரை என்றது. என் விரல்களுக்கிடையில் புகைந்து கொண்டிருந்த சிகரெட் நான் ஆஷ் டிரேக்குப் போகலாமா என்று கேட்டது. என் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வைத் துளிகள் என் களைப்பை வெளிப்படுத்திக் கொண்டிருக்க, நாற்காலியில் நான். கூடவே சிந்தனை.

ஏதோ சாதாரணப் பொருட்காட்சி என்றால் வளையல் கடை, ராட்டினம், ஜெயண்ட் வீல், எதெடுத்தாலும் ஒரு ரூபா, ஜனதா அப்பளம் என்று ஸ்டால்கள் பரப்பிவிடலாம். எத்தனை வருடம் ஆனாலும் இவை தானா; ஜப்பான்காரன் கடலுக்குள் ரயில் விடறான்; நீங்க எதுவும் செய்யமாட்டீங்களா? புதுசா எதுவுமே இந்த மாதிரி பொருட்காட்சிகளில் இடம்பெறவே பெறாதா? என்று பொது மக்களில் யாரும் கேட்கமாட்டார்கள். குச்சியில் சுற்றப்பட்ட பஞ்சுமிட்டாயை ஐந்து ரூபாய் கொடுத்து வாங்கிக் கடித்தபடி ஏதாவது ஒரு ஸ்டால் வாசலில் சிங்கமுகக் கன்னியைப் பார்க்க டிக்கெட் எடுக்க க்யூவில் கால்கடுக்க சிரித்துக் கொண்டே நிற்பார்கள்.

என் விவகாரம் அப்படி அல்ல. அறிவியல் கண்காட்சி. நடத்தப் போவது ஒரு பொறியியல் கல்லூரி. இதில் கொஞ்சம் விஷயம் வேண்டும். நுழைவு வாயிலில் அறிவியல் என்ற வார்த்தையைப் பார்த்த உடனேயே, மலையாளப் படப் போஸ்டரைப் பார்த்த அம்மாமி போல் முகத்தைச் சுளித்துக்

## பொருளடக்கம்

ராஜேஷ்குமார் தொடர் ............ 36

சுபா தொடர் ............ 44

ப்ரீத்தி ஜிந்தா பேட்டி ............ 48

நாலடியார் பதில்கள் ............ 51

ராசி ............ 53

கொண்டு அப்பால் சென்றுவிடுகிறவர்கள் தவிர்த்து உள்ளே வருபவர்களிடம் கொஞ்சம் எதிர்பார்ப்பு இருக்கும். திறந்து வைக்க வரும் வி.ஐ.பி.க்கு ஏதோ வித்தை காட்டுகிறார்கள் என்கிற அளவிலாவது திருப்தி ஏற்பட்டால் தான் நாளை சட்டசபையிலோ வேறு அரங்கிலோ அவர் நம் நாட்டின் அறிவியல் வளர்ச்சி குறித்து ஆணித் தரமாகப் பேச முடியும். இங்கே ஜனதா அப்பளம் விற்றால்கூட அது கொஞ்சம் வித்தியாசமான முறையில் இருந்தால்தான் பொறியியல் கல்லூரிப் படிப்பு பெரிய படிப்புதான்; என்னவெல்லாமோ பண்றாங்கடா என்று நான்கு பேராவது பேசிச் செல்வார்கள்.

இதற்கு நான்தான் பொறுப்பு.

எதிரே சுவரில் மாட்டி இருந்த காலண்டர் எதிரிருப்பது இன்னும் பதினான்கே நாட்கள் என்று காட்டிச் சிரிக்க ஒரு முடிவுக்கு வர முடியாத சிந்தனை என்னைக் குழப்பிக் கொண்டிருந்தது.

விரிவுரையாளன் என்கிற முறையில் சில மாணவர்களைத் தேர்ந்தெடுத்து ஆளுக்கு இன்னது செய்ய வேண்டும் என்று பொறுப்பைப் பிரித்து ஒப்படைக்க வேண்டும். அதற்கு எனக்கு ஐடியாக்கள் வேண்டும். ஐடியாவைச் சொல்லிவிட்டால் பயல்கள் பின்னிவிடுவார்கள். கில்லாடிகள். சந்தேகம் இல்லை. அதற்காகத்தான் இரண்டு இரவுகளாக சிந்தித்த வண்ணம் இருக்கிறேன்.

அணையில் இருந்து தண்ணீர் ஓடி லைட் எரிய வைக்கலாம். கையை நீட்டினால் ஸ்பீக்கர் ஜோஸியம் சொல்ல வைக்கலாம். சாமி படம் பக்கத்தில் போனவுடன் தீபம் எரிய வைக்கலாம். கம்ப்யூட்டரை வைத்துக் கொண்டு சில விளையாட்டுகள் செய்யலாம். கனெக்ஷனே இல்லாத குழாயில் தண்ணீர் கொட்ட வைக்கலாம். இன்னும்... க்ளாமராக எல்லா மக்களையும் சட்டென்று ஈர்க்கும் வண்ணம் ஏதாவது...

இந்த ஐ.டி. யுகத்தில் சொடக்குப் போடும் தூரத்தில் மொத்த உலகும் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரிந்துவிட்டது என்பதால் அதன் அடிப்படையில் நிறைய விஷயங்கள் கண்காட்சி ஸ்டால்களில் இடம் பெற வேண்டியது அவசியம். பார்க்க வருகிறவர்களில் சிலருக்காவது அமெரிக்காவில் உடன்பிறப்புகள் இருப்பார்கள். அவர்களுடன் ஈ மெயிலில் சாட் பண்ண வைக்கலாம். உள் நாட்டு வி.ஐ.பி. யாருடனாவது க்ளோஸ் சர்க்யூட் வீடியோ கான்ஃபரன்ஸிங்குக்கு ஏற்பாடு செய்து இப்படித்தான் சந்திர பாபு நாயுடு ஆந்திராவைக் கலக்கிக் கொண்டிருக்கிறார் என்று பிரமிக்க வைக்கலாம். வெப் காமெரா மூலம் இன்னும் கொஞ்சம் மாஜிக் செய்யலாம். அப்புறம்... அப்புறம்...

யோசித்துக் கொண்டே இருந்தேன். இருந்தபடியே நாற்காலியிலேயே தூங்கிப் போனேன். கையில் இருந்த சிகரெட் நழுவிக் கீழே விழுந்திருக்க வேண்டும். எதுவுமே தெரியாது, காலிங் பெல் அடிக்கும் சப்தம் கேட்கும் வரை.

மெல்ல கனவுலகிலிருந்து நழுவிக் கீழே வந்து கண்கள் கனம் குறைந்து திறக்க மூளையின் கேள்வி நரம்புகள் எனக்கு யாரோ வந்திருப்பதை உணர்த்த எழுந்தேன்.

பெல் ஓசை நின்று கதவு தட்டப்பட்டது.

மணி பார்த்தேன். பதினொன்று.

இந்த இரவில் யார்?

"கம்மிங்" என்று குரல் கொடுத்தபடி வாசலுக்கு விரைந்தேன்.

"யார்?"

"நான் தாண்டா. சீக்கிரம்..."


திறந்தேன்.

பால்கி!

"ஹலோ! என்னடா இந்த நேரத்தில்..."

"உன் ரேவதி தூக்குப் போட்டுக்கிட்டு தற்கொலை பண்ணிக்கிட்டாடா" என்றான் பால்கி, பதற்றமாக.

# 2



**"உங்க மேல வந்து வந்து விழறேனே! ஒருமுறை கூட உணர்ச்சி வசப்படமாட்டீங்களா?" என்றாள்.**

**பா**ல்கியை உற்றுப் பார்த்தேன். பதற்றமாய் இருந்தான். கொஞ்சம் வியர்த்திருந்தான். ஓடி வந்திருப்பான் போலும். மூச்சு வாங்கிக் கொண்டிருந்தான்.

எனக்கு அவன் சொன்னதன் அர்த்தம் புரிந்த மாதிரியும் இருந்தது; புரியாத மாதியும் இருந்தது.

"என்... என்னடா சொல்ற? முதல்ல உள்ளே வா" என்று வழிவிட்டேன்.

உள்ளே வந்தான். எனக்கு கதவைச் சார்த்தித் தாள் போடும்போது கை நடுங்கியது.

உட்கார்ந்தோம். பால்கி என்னைப் பார்க்க சக்தி இல்லாதவன் போல் தலை குனிந்திருந்தான்.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவனாகப் பேசட்டும் என்றிருந்தேன். பேசு என்று சொல்ல தைரியம் வரவில்லை. அவன் சொன்ன விஷயம் பொய் அல்லது கனவு என்று எனக்குள் கற்பனை செய்து கொண்டேன். அவனும் ஒனறும் பேசாமல் மௌனம் சாதித்தது என்னை நிலை கொள்ளாமல் தவிக்கச் செய்தது.

"ரொம்ப ஸாரிடா பாரதி!" என்றான் மெல்ல.

அதற்கு மேல் பொறுக்காமல் என் கண்ணீர் உடைப்பெடுத்தது.

"என்னடா ஆச்சு பால்கி? எப்போ? ஏன்? முந்தாநாள் சிரிச்சுப் பேசிட்டு

இருந்தோமேடா" என்றேன் கண்ணீருக்கு நடுவில்.

பால்கி எதுவும் பேசத் தோன்றாமல் என்னையே பார்த்தபடி இருந்தான். அவனுக்கும் துக்கம் தொண்டையை அடைத்திருக்க வேண்டும்.

"சொல்லுடா! என்ன ஆச்சு?"

"ஸாரிடா! தெரியலை. என்ன காரணம்னு தெரியலை..."

"விஷயம் உறுதியாத் தெரியுமா? அல்லது யாராவது சொல்லி...." எனக்குள் அது தவறான செய்தியாக இருக்கக் கூடாதா என்ற ஆதங்கம். அது அப்படியே குரலில் வழிந்தது.

அவன் மென்று விழுங்கியபடி சொன்னான்: "செய்தி உறுதியானது தாண்டா. நானே நேரில் பார்த்தேன். நம்பவே முடியலைடா.. அவ ஏன் அந்த முடிவுக்குப் போகணும்?"

"ரேவதீ..." என்று அலறி எழுந்தேன். வேகமாக வாசலை நோக்கி ஓடினேன்.

பால்கி துள்ளி எழுந்தான்.

"எங்கேடா போற...?" என்றபடி என் கைகளைப் பிடித்தான்.

"விடுடா. என் ரேவதியைப் பார்க்கப் போறேன். கடைசியா ஒரு முறையாவது பார்த்துக்கறேன். ப்ளீஸ். என்னை விடுடா..." என்று திமிறினேன்.

"பாரதி! உனக்கு பைத்தியம் ஏதும் பிடிச்சிருக்கா? நீ இப்போ அங்கே எப்படிடா போக முடியும்? பதற்றத்தில் எல்லாவற்றையும் மறந்திட்டியா?" என்றபடி என்னை அணைத்துக் கொண்டான்.

எனக்குள் கண்ணீர் உடைப்பெடுத்தது. அப்படியே அவன் தோளில் சாய்ந்து குமுறினேன்.

"ஏண்டா? நான் ஏண்டா அவளைப் பார்க்கக் கூடாது? ப்ளீஸ். என் ஃப்ரெண்டு நீ கூட விடமாட்டேன் என்றால் எப்படிடா?"

என்னைத் தட்டிக் கொடுத்தான்.

"சிறு பிள்ளையாட்டம் பேசாதே பாரதி. உனக்கே தெரியும் உன்னை நான் ஏன் தடுக்கிறேன் என்று. அப்புறமும் ஏன் அடம் பிடிக்கிற...? என்ன நீ சின்னப் பிள்ளையாட்டம் அழுதிட்டிருக்கிற? ஆச்சரியமா இருக்குடா..."

எனக்கு எதுவும் பேசத் தோன்றவில்லை. தோள் தாங்கலாகக் கூட்டி வந்து உட்கார வைத்தான் பால்கி.

"கோவிச்சுக்காதே பாரதி. எனக்கு இப்போ ஒரு அரை மணி நேரம் முன்னாடி தான் விஷயம் தெரியும். முதலில் உன்னிடம் சொல்ல வேண்டாம்னு தான் நினைச்சேன். அப்புறம் நீ வேறு யார் மூலமாவது விஷயம் கேள்விப்பட்டு நிலைமையை யோசிக்காமல் அங்க போய் நின்னா என்னென்ன பிரச்சினைகள் வரும்னு யோசிச்சுப் பார்த்தேன். அதனால்தான் இந்த ராத்திரியிலும் நானே ஓடி வந்தேன்".

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தேன்.

பால்கி என் மேசையில் இருந்து சிகரெட் பெட்டியை எடுத்து அதிலிருந்து இரண்டு சிகரெட்டுகளை உருவி எடுத்துப் பற்ற வைத்து ஒன்றை என்னிடம் நீட்டினான்.

தயங்கி வாங்கி உதட்டில் வைத்து ஆழமாக ஓர் இழுப்பு இழுத்தபோது என் படபடப்பு சற்று குறைந்தது.

"ஏதாவது பேசுடா" என்றான் பால்கி.

"எதைப் பேச?" என்றேன் விரக்தியாக.

"ஏதாவது"

கொஞ்ச நேரம் பேசாமல் இருந்தேன். பிறகு மெதுவாக "வாடா! மூலைக் கடையில் போய் டீ சாப்பிட்டு வரலாம்" என்று எழுந்தேன்.

"ஒரு கண்டிஷன். ரோட்டில் வைத்து நீ அடம் பிடிக்கக் கூடாது, 'ரேவதியைப் பார்க்கப் போயே தீருவேன் என்று...' "

விரக்தியாய் சிரித்தபடி செருப்பைப் போட்டேன். கதவின் தாளைத் திறந்தேன்.

சில்லென்ற வெளிக் காற்று முகத்தைத் தாக்க மெதுவாக நடந்தோம்.

"என்ன விநோதம் பாருடா பால்கி. என் லவர் இதே ஊரில் அடுத்த மூலையில் தூக்குப் போட்டு இறந்திருக்கா. நான இங்கே டீ குடிக்கப் போயிட்டிருக்கேன்"

பால்கி ஏதும் பேசாமல் வந்தான்.

"எப்போ இறந்தாளாம்?"

"காலை பதினொரு மணி வாக்கில் கடைத் தெருவில் அவளை நான் பார்த்தேன். மார்க்கெட் போயிட்டு வீட்டுக்குப் போயிட்டிருக்கறதா சொன்னாள். வேறு ஒண்ணும் பேசலை. சாதாரணமாகத்தான் இருந்தாள். ஜஸ்ட் சிரித்துவிட்டுப் போய்விட்டாள். ஆறு ஆறரை வாக்கில் தான் இறந்திருக்கணும்னு பேசிக்கிட்டாங்க..."

என் கைகள் கொஞ்சம் நடுங்கின. சிகரெட்டை ஆழ்ந்து இழுத்து படபடப்பை அடக்கினேன்.

"என்னால் இன்னும் நம்ப முடியலையேடா...!"

"யாரால் தான் நம்ப முடிகிறது?"

டீக்கடை வந்தது. டீயை வாங்கி குடித்து முடித்து கொஞ்ச நேரம் அங்கிருந்த பெஞ்சிலேயே உட்கார்ந்திருந்து விட்டுத் திரும்பி நடந்தோம்.

"பாரதி! ஒண்ணு கேட்பேன். தப்பா நினைச்சுக்கமாடியே..."

ஒன்றும் பேசாது அவனை ஏறிட்டேன்.

"எந்த உள்நோக்கத்தோடும் கேட்கலை. ஜஸ்ட் லைக்தட் தான் கேட்கிறேன்.." என்று இழுத்தான்.

"கேளுடா"

"உன்னிடம் ரேவதி ஏதும் சொன்னாளா? முந்தா நாள் பேசிட்டிருந்ததா சொல்றியே அப்போ ஏதும் கோடி காட்டினாளா?"

யோசித்துப் பார்த்தேன். சும்மா தானே பேசிக் கொண்டிருந்தோம்?

"இல்லையேடா"

"உங்களுக்குள் சண்டை ஏதாவது?"

சோகமாய்ச் சிரித்தேன்.

"அவள் சண்டை போடும் ஜாதியாடா? அவள் சிரிப்பை மீறித் தான் என்னால் சண்டை போட முடியுமா?"

பால்கியும் மௌனமானான்.

மெதுவாய்க் கேட்டேன் : "பால்கி! அவளோட அப்பா இன்னுமா என்னை விரோதியாய் நினைத்துக் கொண்டிருப்பார்?" பால்கி நின்று என்னை உற்று நோக்கினான்.

"பார்த்தியா! வேதாளம் முருங்கை மரம் ஏற ஆரம்பிச்ச கதையா கேட்க ஆரம்பிச்சுட்ட..."

"அதுக்கில்லைடா. ஜஸ்ட் அவள் தெருவில் நின்றபடி ஒரு பார்வை. இந்த இரவில் இருட்டில் யாருக்குத் தெரியப் போகிறது?"

"இடியட் மாதிரிப் பேசாதே. அவள் பண்ணிக்கிட்டது தற்கொலை. முதலில் இது போலீஸ் கேஸ். பாடி இவ்வளவு நேரத்துக்கு போலீஸ் கிட்டயோ போஸ்ட் மார்ட்டத்திலயோ இருக்கும். நீ நினைத்தாலும் இப்போ பார்க்க முடியாது. உன்னை ஏன் போக வேண்டாம்னு சொல்றேன்னா அநாவசியமா போலீஸ் நோக்கத்தில நீ விழுந்து வைக்கக் கூடாதேன்னு தான். புரியுதா?"

"போலீஸ் நோக்கத்திலா? நானா? எப்படி?"

"மடையா! அவ அப்பா கிட்ட போலீஸ் விசாரணைன்னு பண்ணும்போது உங்களுக்கு விரோதிங்க யாரும் உண்டான்னு கேட்குமா, கேட்காதா? அவர் என்ன சொல்லுவார்? அவரே ஒரு வேளை உன்னை மறந்திருந்தாலும் நீ அங்கே போய் நின்னு வச்சா உன்னைப் பார்த்ததும் ஒரு ஆவேசத்தில் உன்னைப் பற்றித் தாறு மாறா போலீஸ் கிட்ட சொல்லித் தொலைக்க மாட்டார்னு என்ன நிச்சயம்? அப்புறம் போலீஸுக்கு உன் மேல சந்தேகம் வர்றத யாரால் தடுக்க முடியும்? யோசித்துப் பார். இத்தனையும் மீறி நீ போய் ரேவதியின் பிணத்தைப் பார்த்தே தீரணும்கிற அளவுக்கு இன்னிக்குத் தேதிக்கு உனக்கும் அவளுக்கும் என்னடா சம்பந்தம்?"

வாயடைத்தேன்.

"உன் பொஸிஷனுக்கு நீ பார்க்கிற லெக்ஸரர் உத்தியோகத்துக்கு போலீஸ் சகவாசம் நல்லதில்லை. புரியுதா?"

புரிந்ததோ புரியவில்லையோ மௌனம் சாதித்தேன்.

அன்று மட்டும் அல்ல, அடுத்த நாளும் முழுக்க மௌனமாகவே இருந்தேன். கல்லூரிக்கும் லீவு போட்டேன்.


சும்மா சொல்லக் கூடாது, பால்கி உற்ற நண்பனாக உடன் இருந்தான். நான் பழையதை நினைத்து அழும்போதெல்லாம் தேற்றினான். என்னை வீட்டை விட்டு வெளியே விடாமல் பார்த்துக் கொண்டான். அவன் மட்டும் காவல் இருந்திராவிட்டால் நான் ஏதோ ஒரு பலவீனமான கணத்தில் ரேவதி வீட்டை நோக்கி ஓடியிருந்தாலும் ஓடியிருப்பேன்.

மூன்றாம் நாள் நான் தெளிந்திருந்தேன். என் தெளிவில் நம்பிக்கை வந்தவனாக என்னை விட்டுவிட்டு வீட்டுக்குக் கிளம்பிச் சென்றான் பால்கி.

தனியாக இருந்தேன். சோகம் முழுக்க வடிந்து விட்டிருந்தது. நேற்றும், முந்தினமும் நான் செய்திருந்த ஆர்ப்பாட்டங்களை நினைத்துப் பார்க்க சிரிப்பு வந்தது.

எவ்வளவு மன உறுதி படைத்தவன் என்று பெயரெடுத்தவன் நான்! எத்தனை முறை ரேவதியே "உங்க மேல வந்து வந்து விழறேனே! ஒரு முறை கூட உணர்ச்சி வசப்படமாட்டீங்களா?" என்று கேட்டு வியந்திருக்கிறாள். இப்போது மட்டும் அவளே என் எதிரில் இருந்தால் எவ்வளவு கேலி செய்திருப்பாள்!

# 3



## அதனால் தான் ரேவதி மேல் காதல் வயப்பட்டேனோ?

அப்பா திடீரென்று ஒருநாள் காலையில் டிபன் சாப்பிட்டு விட்டு ஆஃபீஸ் போனவர் மாலையில் பிணமாக வீட்டுக்குத் தூக்கி வரப்பட்டபோது நான் கடைசி செமஸ்டர் பரீட்சைகளை முடித்துவிட்டு முடிவுகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மாவும் மூன்று தங்கைகளும் புரண்டு அழுதபோது அவர்களின் எதிர்காலம் குறித்த எண்ணம்தான் என் சிந்தனை முழுக்க இருந்தது. அம்மா மயங்கி மயங்கி விழுந்ததும் அடுத்த ஒரு வாரத்தில் இரண்டு முறை தற்கொலைக்கு முயன்றதும் என் மனதில் வாழ்க்கையைச் சவாலாக்கிய நிகழ்ச்சிகள். அம்மாவுக்கு வாழ்க்கையின் மீது ஒரு நம்பிக்கையை ஊட்டுவதற்கே ஒரு மாதம் பிடித்தது. என்னுடைய அந்தச் செயல்களிலேயே தங்கைகளுக்கு என் மீது நம்பிக்கையும் மரியாதையும் வந்திருக்க வேண்டும். அவர்கள் விரைவிலேயே மனம் தேறி அப்பாவின் இடத்தில் என்னை வைத்துப் பார்க்க ஆரம்பித்தார்கள். " அண்ணா! உனக்கு வேலை கிடைத்து முதல் சம்பளத்தில் எனக்கு ஒரு காஷ்மீர் சுடிதார்"

அப்பா ரொம்ப நல்லவர். என் படிப்புக்காகத் தான் வாங்கியிருந்த கடன் தொகையைத் தன் மரணத்தின் மூலம் அடைத்துச் சென்றுவிட்டார். அவர்

பெயரால் கிடைத்த தொகையில் கடன்கள் போக மிஞ்சியது மிகவும் சொற்பமே. அதை அப்படியே வங்கிக் கணக்கில் போட்டு என் வாழ்க்கைக் கணக்கைத் தொடங்கினேன்.

படித்த இன்ஜினீயரிங் படிப்புக்கு பம்பாய் டெல்லி என்று வேலைகள் வந்தன. இப்போதைய வீட்டு நிலைமை குறித்து புறக்கணித்தேன். லெக்சரர் வேலைக்கு அப்ளை செய்ய ஆரம்பித்தேன். பத்து நாட்களுக்குள் இன்டர்வ்யூ வந்தது. இன்டர்வ்யூவில் கல்லூரி முதல்வரும் தாளாளரும் முதலில் கேட்ட கேள்வி : ``இவ்வளவு மார்க்கும் மெரிட் சர்டிஃபிகேட்டுகளும் வைத்திருக்கிறீங்களே! உங்களுக்கு நல்ல சம்பளத்தில் வேறு நல்ல இடத்தில் சீக்கிரம் வேலை கிடைத்துவிடும். செமஸ்டரின் பாதியில் வேலையை விட்டு விட்டுப் போயிடுவீங்களே! உங்களை மாதிரி கொஞ்ச வயது இன்ஜினீயர்கள் எல்லாம் லெக்சரர் வேலையை வேறு நல்ல வேலை கிடைக்கும் வரையிலான ஸ்டாப் கேப் அரேன்ஞ்மென்ட்டாத்தானே நினைக்கிறீங்க?"

அது ஒரு வகையில் உண்மை தான் என்று எனக்கே தெரியும். எனவே என்ன சொல்வது என்று தெரியாமல் அமைதி காத்தேன்.

"உங்களுக்கெல்லாம் வாத்தியார் வேலை என்றால் இளப்பந்தானே? இன்ஜினீயரிங் படித்துவிட்டால் ஏதாவது ஒரு கம்பெனியில் ஒயிட் காலர் ஜாப் வேண்டும். மேசை முன்னால் ஒரு கம்ப்யூட்டர். மணி அடித்தால் கேட்டது கொண்டு வர ப்யூன், செகரட்டரி என்று கனவுகள். உங்களால் எப்படி இந்த வேலையில் மனம் ஒப்பி இருக்க முடியும்?"

அவருக்கு ஒவ்வொரு வருடமும் நடுநடுவே ஓடிப் போய் விடுகிற லெக்சரர்களால் ஏற்படுகின்ற டென்ஷன்கள் இப்படிப் பேச வைக்கின்றது என்பது புரிந்தது. நீங்கள் நல்ல சம்பளம் தந்தால் அவர்களில் பாதிப் பேராவது அவ்வாறு போவதற்கு யோசிப்பார்கள் அல்லவா என்று சொல்லத் தோன்றியது.

நான் அப்படிச் செய்ய மாட்டேன் என்று வாய்மொழி உத்தரவாதம் தந்தேன். என் வீட்டு நிலைமையை எடுத்துக்காட்டி விளக்கினேன். குறைந்தபட்சம் மூன்று வருடங்களாவது இந்த வேலையை விட்டுப் போக மாட்டேன் என்றும் அதன் பிறகும்கூட சம்பளம் முதலான விஷயங்கள் சந்தோஷம் தந்தால் இந்த வேலையிலேயே தொடர்ந்து இருப்பேன் என்றும் நான் தந்த உறுதி மொழிகள் அவர்களுக்கு எந்த அளவு நம்பிக்கை தந்தன என்று தெரியவில்லை. ஆனால வேலை தந்தார்கள். அடுத்த வாரத்திலேயே வேலையில் சேரப் பணிக்கும் அப்பாயின்ட்மென்ட் ஆர்டர் கைக்கு வந்தது.

வீட்டிலிருந்து இருநூறு கிலோமீட்டர் தள்ளி இருந்த இடம். பரவாயில்லை என்று தோன்றியது. ஆறு மாதங்கள் மட்டும் கன்ஸாலிடேட்டட் சம்பளம், அதன் பிறகு பர்ஃபாமன்ஸ் பிடித்திருந்தால் யூஜிஸி சம்பளம் என்று சொல்லியிருந்தார்கள். எனக்கு நம்பிக்கை இருந்தது.

சிறிய ஊர் என்பதால் குறைந்த செலவில் சமாளிக்க முடியும். இடையிடையே வீட்டுக்கும் வந்து இவர்களைப் பார்த்துக் கொள்ளலாம். ஓரளவு வீடு செட்டில் ஆனவுடன் பெரிய வேலைக்குப் போகும்போது

அம்மாவையும் கடைசித் தங்கையையும் கூட அழைத்துச் சென்றுவிடலாம். அதற்குள் மற்ற இரு தங்கைகளின் திருமணங்களை முடித்துவிட்டு...

திட்டங்கள், திட்டங்கள், பணம் இல்லாமல் திட்டங்கள்...

சம்பளத்தில் செலவு போக எவ்வளவு மிச்சம் பிடித்து.. வீட்டுச் செலவு போக.. எவ்வளவு சேமித்து.. இடையிடையே வரும் தீபாவளி பண்டிகைகளின் துணி மணி செலவுகளைச் சமாளித்து...

குழம்பிய தலையுடன் தான் வேலையில் சேர்ந்தேன். தற்காலிகமாக ஒரு லாட்ஜில் ரூம் போட்டிருந்தேன். அப்போது பழக்கமானவன் தான் பால்கி.

நான் தங்கியிருந்த லாட்ஜின் கீழே ஒரு பெட்டிக்கடை உண்டு. அதன் உரிமையாளன் தான் பால்கி. அவன் பி.ஏ. படித்தவன் என்று அறிந்தபோது எனக்கு மிகவும் வியப்பு. படிப்பின் மீது போலி மரியாதை வைக்காமல் அப்பாவுக்குத் துணையாய் பெட்டிக்கடை வியாபாரத்தைக் கவனிக்க வந்துவிட்டதாகச் சொன்னபோது என் மதிப்பில் மிகவும் உயர்ந்தான். கிட்டத்தட்ட என் வயதுதான். அதனாலேயே எங்கள் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக நட்பாக மலர ஆரம்பித்தது.

நீங்க போங்க வாங்க என்று மரியாதை கொடுத்துப் பேசிக் கொண்டிருந்தவர்கள் நீ வா போ என்று இறங்கி போடா வாடா என்கிற அளவுக்கு இரண்டு மாதங்களிலேயே நெருங்கிப் போனோம்.

பால்கி தான் எனக்குக் குறைந்த வாடகையில் வீடு பிடித்துக் கொடுத்தான். ஒரு வீட்டின் மாடிப் போர்ஷன். ஒரு பெரிய அறை. ஒரு சமையல் அறை. வெளியே குழாய். பாத்ரூம், லெட்ரின் எல்லாம் மாடியிலேயே. தனிக்கட்டைக்கு ஐடியலான இடம்.

வீட்டின் ஓனர் கீழ்ப் போர்ஷனில் தான் இருந்தார். அவர் தவிர அந்த வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்று கூட முதலில் எனக்குத் தெரியாது. எல்லாம் பால்கி தான் பேசி முடித்தான். ஒரு முறை அட்வான்ஸ் கொடுத்தபோது வீட்டின் ஹாலில் உட்கார வைத்துப் பேசிக் காஃபி கொடுத்தார். கறாராகப் பேசினார். பேசாமல் தலை ஆட்டிவிட்டு வெளியில் இருந்தபடிக்கட்டுகள் வழியாக ஏறி என் போர்ஷனுக்குப் போனேன். அவ்வளவுதான், நானாச்சு என் போர்ஷனாச்சு என் படிப்பாச்சு.

பால்கி தான் நெருங்கிக் கொண்டே வந்தான். உலகறிந்த பேச்சு. பெரிய புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம். சில பிரச்சினைகளில் அவன் இடுபட்டுக் காட்டிய புத்தி சாதுர்யம் எல்லாவற்றாலும் என்னைக் கவர்ந்தான்.

வீட்டு நினைவோ எதிர்காலக் கவலையோ எனக்கு வந்து மூடு அவுட்டாகி இருந்தால் நன்றாகத் தேற்றுவான். நிறைய ஆறுதல் சொல்லுவான்.

"பாரதி! நான் ஒண்ணு சொன்னால் தப்பா நினைக்க மாட்டியே..."


"சொல்லு பால்கி"

"நாம் இவ்வளவு பழகியும் என்னிடம் மனம்விட்டு நீ உன் கவலைகளையோ

எண்ணங்களையோ கொட்டுவதிலை. உன் உறுதி சரிதான். ஆனால் ஒன்றை உணர்ந்து கொள். உன் அப்பா இறந்த நாளில் கூட நீ இறுகிப் போய் உட்கார்ந்திருந்ததாகச் சொல்லியிருக்கிறாய். உனக்கு சிறிய வயதிலேயே பெரிய பொறுப்புகளை ஏற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது விதியின் கொடுமை. நீ இப்படி இறுகியே இருந்தால் இதில் உனக்கு சீக்கிரமே சோர்வு ஏற்பட்டுவிடும். உனக்கு அவ்வப்போது ரிலீஃப் தேவை. என்னைக் கேட்டால் உனக்கு நல்ல அட்வைஸ் நீ யாராவது நல்ல பெண்ணாய் உன் மீது பிரிமியம் உள்ள பெண்ணாய்ப் பார்த்து லவ் பண்ணு என்பதுதான்"

"சேச்சே" என்று நான் வெளிப்படையாக மறுத்துச் சொன்னாலும் அவன் இதனை அடிக்கடி சொல்லச் சொல்ல அவனுடைய சொற்களின் உண்மை என்னை உறுத்தாமல் இல்லை.

அதனால் தான் ரேவதி மீது காதல் வயப்பட்டேனோ?



## 4

**என் பெயருக்கு தபால் ஒன்று வந்தது இறந்து போன ரேவதியிடமிருந்து**

அன்று காலை திடீரென்று தூக்கம் கலைந்து ஜன்னல் வழியாக வெளியே பார்த்தபோது, மாடியின் திறந்தவெளியில் கட்டப்பட்டிருந்த கொடிக் கயிற்றில் ஒரு பெண் - பெண்ணா அவள் - தேவதை - துணி காயப் போட்டுக் கொண்டிருந்தாள். அந்த அதிகாலையில் குளித்து ஈரம் சொட்டிய நீண்ட கூந்தலின் முனையில் முடி போடப்பட்டிருந்தது. கூந்தல் படர்ந்து முதுகுப் பகுதி ஜாக்கெட்டை மிச்ச ஈரத்தால் நனைத்திருக்க, ஒப்பனை இல்லாத முகம் பக்க வாட்டில் தெரிந்தது. அதில் பட்டு மின்னிய காலை இளங்கதிரவனின் புண்ணியம் செய்த கதிர்களுடன் புது மலராக அவள் நின்றிருந்த கோலம் என்னைக் கை எடுத்துக் கும்பிட வைத்தது.

முழுதுமாக இந்தப் பக்கம் திரும்ப மாட்டாளா என்கிற என் ஆர்வப் படபடப்பை லட்சியமே செய்யாதவளாக தோளில் கிடந்த நான்கைந்து உருப்படிகளையும் நன்கு விரித்து காயப் போட்டு முடித்த பின் மெல்ல என் பக்கமாகத் திரும்பினாள்.

நான் பார்த்துக் கொண்டிருந்ததை அவள் எதிர்பார்த்திருக்கமாட்டாள் போலும். சட்டென்ற மெல்லிய அதிர்வு அவளுடைய சிவந்த முகத்தை மேலும் சிவப்பாக்கியது. அனிச்சையாக அவள் கைகள் ஏற்கெனவே திருத்தமுற இருந்த ஆடைகளை இன்னும் திருத்தின. அவளுக்குள் ஏற்பட்ட ஏதோ உணர்வு புன்னகையாய் வெடிக்க, என்னை நோக்கி ஒரு இளஞ்சிரிப்பை வீசிவிட்டு

ஓடிவிட்டாள்.

எனக்குள் ஒரு நல்ல பாட்டு திடீரென்று நின்றுபோன உணர்வு.

யாரிவள்? இதுவரை பார்த்ததில்லையே!

தினமும் காலை வேளைகளில் இங்கு காயும் துணிகளை இவள் தான் காயப் போடுகிறாளா? இது நாள் வரை யாராக இருக்கும் என்று நினைத்தது கூடக் கிடையாதே!

அன்று காலை சீக்கிரமே எழுப்பிவிட்டதற்காக ஆண்டவனுக்கு நன்றி சொன்னேன்.

அகர்பத்தி கரைந்து முடிந்த பிறகும் அதன் சுகந்த மணம் கொஞ்ச நேரம் இருப்பது போல் அவள் போன பிறகும் அவள் உருவமும் நினைவும் சுற்றிக் கொண்டே இருந்தன.

யார் அவள்? ஓனர் வீட்டுப் பெண்ணா? அவர் மகளா? அந்த ஆளை ஒருமுறைக்கு பல முறை பார்த்திருக்கிறேன். அவருக்கு இவ்வளவு அழகாக ஒரு மகளா சான்ஸே இல்லை.

இரை விழுங்கிய மலைப் பாம்பு போல் அசையாமல் படுத்துக் கிடந்தபடி அவள் உருவத்தை மனக் கண் முன் கொண்டு வந்து உருகிக் கொண்டிருக்க சுகமாய் இருந்தது.

எழுந்து குளித்து உடை மாற்றி கல்லூரிக்குக் கிளம்பிப் படி இறங்கி வருகையில் முதல் முறையாக என் தலை என்னையும் அறியாமல் ஓனர் போர்ஷனின் பக்கமாகத் திரும்பியது. யாரும் இல்லை. கொஞ்சம் ஏமாற்றமாகக் கூட இருந்தது.

எனக்கே வியப்பு கலந்த சிரிப்பு.

நானா? எனக்கா இப்படி ஒரு சபலம்? சே!

கல்லூரிக்குப் போனேன்.

"ஹலோ! என்ன சார் கனவுலகில் இருக்கிறாற் போல் இருக்கே..." என்ற ரூபச் சந்திரனின் குரலுக்குக் கலைந்தேன்.

ரூபச் சந்திரன் என்னுடன் பணியாற்றும் சக விரிவுரையாளர். எனக்கும் அவருக்கும் ஒரே லேபரட்டரியில் ஒரே ரூமில் இருக்கைகள். என்னைவிட நான்கு வயது மூத்தவர். எனக்குக் கொஞ்சம் சீனியர் என்பதோடு அவருடைய சில பழக்க வழக்கங்கள் பிடிக்காததாலும் அவரை விட்டுக் கொஞ்சம் விலகியே இருப்பேன். இருந்தாலும் அவர்விட மாட்டார். அவருக்கு எல்லோருடனும் கலகலப்பாகப் பழகும் சுபாவம், குறிப்பாகப் பெண்களுடன்.

"என்ன பாரதி! நான் கேட்டதற்கு பதிலே இல்லை. பொதுவா நான் தான் இப்படி ஏதோ சிந்தனையில் தன்னை மறந்து உட்கார்ந்திருப்பேன்..."

அசடு வழிந்தேன். காலையில் பார்த்த தேவதையின் நினைவில் இருந்தேன் என்றா சொல்ல முடியும்? அதுவும் இந்த ரூபச் சந்திரனிடம்?

"கிளாஸ் முடிச்சிட்டு வர்றீங்களா?" என்றேன் ஏதோ கேட்க வேண்டுமே

என்பதற்காக.

"ம்" என்றபடி டஸ்டரைத் தன் மேசையின் ஓரத்தில் வைத்தார். "இன்னிக்கு சுவாரசியமா ஒரு விஷயம்...." என்றார். பானையிலிருந்து தண்ணீர் மொண்டு ஜன்னல் வழியே சாக்பீஸ் துகள்கள் ஒட்டியிருந்த கைகளைக் கழுவினார். டவலால் கைகளைத் துடைத்துக் கொண்டபடியே தன் இருக்கையில் உட்கார்ந்து என்னைப் பார்த்தார்.

நான் அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவர் என்ன சொல்லப் போகிறார் என்று எனக்குத் தெரியும். வேறு வழியில்லை. அவர் சொல்வதைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்.

"நான் வகுப்பில் லெக்சர் கொடுத்தபடியே எல்லோரையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். முன் வரிசையில் உட்கார்ந்திருந்த பிருந்தாவுக்கு..." என்று தொடங்கி பத்து நிமிடங்கள் கதை அளந்தார். பெண்களின் அங்கங்களை விலாவாரியாக விவரித்துப் பேசுவதில் அவருக்கு நிகர் அவரே.

"... எனக்கு எப்படி இருந்திருக்கும், நினைத்துப் பாருங்க" என்றபடி தன் கைகளை அழுந்த உரசிக் கொண்டார். காற்றில் ஏதோ கற்பனையுடன் "ம்ம்... மா" என்று முத்தமிட்டார். "பிருந்தாவுக்கு இண்டர்னல் மார்க்கில் இரண்டு மார்க் போனஸ்" என்றார்.

நான் மரமாய்க் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"சாரி, உங்க கிட்ட போய் சொல்றேன் பாருங்க. சாமியார்! உங்களுக்கு எங்கே புரியப் போகுது?"

'புரியாது. அக்கா தங்கைகளோட பிறந்திருந்து அவங்களோட பாசமா பழகியிருந்தா யாருக்குமே புரியாது தான்' என்று சொல்ல நினைத்தேன். சொல்லவில்லை. அவசியமில்லை; பிரயோசனமும் இல்லை என்று பட்டது.

"பாரதி! நான் ஏன் உங்களுக்கு வலது பக்கமா என் மேசை நாற்காலியைப் போட்டிருக்கேன் தெரியுமா? உங்ககிட்ட அஸைன்மெண்ட் சப்மிட் பண்ண டெஸ்ட் மார்க் கேட்க அது இதுன்னு இங்கே வர்ற..."

அவரை மேற்கொண்டு தொடர விடாமல் "சார் ப்ளீஸ்" என்று தடுத்தேன். "உங்களுக்கு இதைவிட்டால் வேற விஷயங்கள் பேசவே தெரியாதா?"

"யார் சொன்னது? பேசுவேன். ஆனா இப்போ இல்லை. இன்னும் வயசானப்புறம். இந்த வயசுக்கு இதுதான்" என்றபடி தன் மேசை இழுப்பறையைத் திறந்து செக்ஸ் புத்தகம் ஒன்றை எடுத்துப் படிக்க ஆரம்பித்தார்.

நான் வெளியே சிரித்துக் கொண்டேன் உள்ளே நொந்தபடியே.

**மா**லை பால்கியிடம் ரூபச்சந்திரன் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

அவன் சிரித்தான்.

"பாரதி! உன் பிராட் அப் அப்படி... நீ உன்னையே ஏமாத்திக்கிறயா அல்லது உனக்குள்ளேயே உறைந்து போயிட்டயான்னு புரியலை. எனக்கு இதுக்கு மேல ஒண்ணும் சொல்லத் தோணலை" என்றான்.



அவனிடம் காலையில் கண்ட தேவதை குறித்து சொல்லலாமா என்று எழுந்த எண்ணத்தைக் கூச்சம் காரணமாகத் தள்ளி வைத்தேன்.

மறுநாள்.

நல்ல தூக்கத்தில் இருந்த என் மீது பளிச்சென்று விழுந்தன, ஓரிரண்டு நீர்த் துளிகள்.

அதிர்ந்தாற்போல் எழுந்தேன்.

முகத்தைத் தொட்டுப் பார்த்துக் கொண்டேன்.

பல்லி ஏதும் எச்சம் போட்டுவிட்டதா?

விட்டத்தில் பார்த்தேன். எதுவும் இல்லை.

அப்போது தான் ஞாபகம் வந்தது நேற்றைய காலை.

சட்டென்று ஜன்னல் பக்கமாய்த் திரும்பினேன்.

அவள் துணி காயப் போட்டுக் கொண்டிருந்தாள்.

எனக்கு அவளுடைய முதுகு தான் தெரிந்தது.

அவள் தான் தண்ணீர் தெளித்தாளா? நிச்சயமாக அப்படித்தான் இருக்க வேண்டும். ஈரத் துணியைப் பிழிந்து ஜாக்கிரதையாக மிகச் சில நீர்த்துளிகளை மட்டும் கையில் ஏந்தி ஜன்னல் வழியாக விசிறி இருக்க வேண்டும்.

செய்வதையும் செய்துவிட்டு எதுவுமே அறியாதவள் போல் முதுகைக் காட்டியபடி துணிகளை காயப் போடும் அவளின் பின்புறம் பார்க்கப் பார்க்க எனக்குள் ஓடிய சுகந்த உணர்வுக்குப் பெயர் சொல்லத் தெரியவில்லை.

எப்படியும் ராணி இந்தப் பக்கம் திரும்பித்தானே ஆக வேண்டும்? அப்போது அவள் முகம் காட்டிக் கொடுத்துவிடுமே அவள் செய்த குசும்பினை, என்ற எண்ணத்தில் அவளையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கல்லுளி மங்கி!

மிக இயல்பாக என் பக்கமே திரும்பாமல் வாளியை எடுத்துக் கொண்டு போய்விட்டாள்.

சே!

காலண்டர் கண்களில் பட்டது. ஆஹா! இன்று வீட்டு வாடகை கொடுக்க வேண்டிய நாள்!

இன்று எப்படியாவது அவளை அருகில் நன்றாகப் பார்த்துவிட வேண்டும்.

அவசரமாகக் குளித்துவிட்டுக் கிளம்பினேன்.

மெல்லப் படியிறங்கி ஓனர் வீட்டின் வாசலில் போய் நின்ற போது ஒத்திகை பார்த்திருந்த தைரியமெல்லாம் காணாமல் போய் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டுவிட்டது. குரல் எழும்பவே இல்லை.

கை மட்டும் உயர்ந்து காலிங் பெல்லை அழுத்தியது.

அவளே வந்து கதவு திறந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

"யார்?" என்றது ஓர் ஆண் குரல்.

தொடர்ந்து கதவு திறக்கப்பட, ஓனர்!

என் கண்கள் என்னையும் மீறி உள்ளே தாவி ஏமாற்றத்தைத் தழுவி மீண்டன.

"வாங்க சார்! என்ன விஷயம்"

"இது... வாடகை கொடுக்க வந்தேன்..." என்று இழுத்தேன்

"ஹி... ஹி... டாண்ணு தேதிக்குத் தந்திடறீங்களே, ஐ லைக் இட்", என்றபடி வாங்கிக் கொண்டார்.

"தேங்க்யூ சார்" என்று விடை பெற்றுத் திரும்பினேன்.

"சார் ஒரு விஷயம்" என்று நிறுத்தினார் ஓனர்.

"என்ன சார்?"

"சாயங்காலம் எத்தனை மணிக்கு வருவீங்க?"

"ஆறு மணிக்கு" என்றேன்.

"கொஞ்சம் இங்கே வாங்க சார். முக்கியமான விஷயம் ஒண்ணு பேசணும்" என்று சஸ்பென்ஸ் தந்தவராக உள்ளே போய்விட்டார்.

சாயங்காலம் வரை பொழுதை ஓட்ட நான் பட்ட பாடு அந்த ஆண்டவனுக்குத் தான் தெரியும்.

சாயங்காலம் ஆறேகாலுக்கு நான் அவர் வாசலில் நின்றிருந்தேன்.

"உள்ளே வாங்க சார்..." என்று அழைத்துச் சென்று ஹாலில் உட்கார வைத்தார்.

அட்வான்ஸ் கொடுத்த அன்று உள்ளே போனதோடு சரி. இப்போது மீண்டும் ஏன்? வாடகையைக் கூட்டிக் கேட்கப் போகிறாரா?

"மீனாட்சி" என்று குரல் கொடுத்தார்.

அவருடைய சம்சாரமாக இருக்க வேண்டும். உள்ளே இருந்து ஒரு தட்டில் டிபன் கொண்டு வந்தார்.

"சார்! நான் இதெல்லாம் வெளியிலேயே முடித்துக் கொண்டு விட்டேனே..!" என்று தயங்கினேன்.

"பரவாயில்லை சார், சும்மா சாப்பிடுங்கள்" என்று பலமாக உபசரித்தார்.

சிறிது நேர அமைதிக்குப் பிறகு, "சார்! காலையிலேயே சொல்லிடலாம்னுதான் நினைச்சேன். நீங்க காலேஜ் போற அவசரத்தில் இருப்பீங்கன்னு தான் சொல்லலை"

"சரி இப்போ சொல்லுங்க"

"ஒண்ணுமில்லை. நம்ம ரேவதி, பி.எஸ்.ஸி., பண்றா. ரெண்டாவது வருஷம். கணக்கு கொஞ்சம் புரியலையாம். உங்ககிட்ட அப்பப்போ கேட்டுக்கலாமான்னு கேட்டு சொல்லச் சொன்னா..."

பி.எஸ்.ஸி. கணக்கா? எனக்கு நன்றாகத் தெரிந்திருக்க வாய்ப்பே இல்லை. நான் எப்படி....?

"சார் யார் இந்த ரேவதின்னு முழிக்கிற மாதிரி தெரியுது. என் பொண்ணுதான் சார்" என்றவர் உட்புறம் திரும்பி, "ரேவதீ..." என்று குரல் கொடுத்தார்.

காலை வேளைகளில் துணி காயப்போடும் தேவதை மெல்ல நடந்து வந்தாள். ஆஹா! முகமா அது? சந்திர பிம்பம். சட்டென்று பார்வையைக் கஷ்டப்பட்டு திருப்பினேன்.

"ரொம்பக் கூச்ச சுபாவம் சார், உங்களைப் போலவே. சார் சரின்னுட்டாரும்மா. அவர் பெரிய பெரிய இன்ஜினீயரிங் படிப்பெல்லாம்

படிச்சவரு. உன் பாடமெல்லாம் அவருக்கு தூசு மாதிரி. எப்போ வேணும்னாலும் போய் சந்தேகம் கேட்டுக்கோ. என்னங்க சார், நான் சொன்னது சரிதானே?" என்று அவரே எல்லாம் சொல்லி முடித்துவிட்டார். ஏதோ என் சம்மதத்தை ஏற்கெனவே வாங்கி இருந்தவரைப் போல.

மறுநாள் மாலையே புத்தகத்துடன் மேலே வந்துவிட்டாள்.

"மே ஐ கம் இன் சார்" என்று பணிவாய்க் கேட்டபடி வாசலில் நின்றாள்.

"வாங்க" என்றேன்.

உள்ளே வந்தாள். சுற்றிலும் ஒரு முறை பார்த்தாள்.

"பரவாயில்லையே, நான் கூட பிரம்மச்சாரியின் போர்ஷனாச்சே, எப்படி இருக்குமோன்னு பயந்திட்டே வந்தேன். ரொம்ப நீட்டாவே வச்சிருக்கீங்க, குட்" என்றாள்.

"காலை நேரங்களில்ல துணிகாயப் போட வந்தா ஒழுங்கா காயப் போட்டுட்டுப் போக முடியாதா? எதுக்கு எம்மேல தண்ணியைத் தெளிச்சு விளையாடற?"

"யார்? நானா? என்ன அபாண்டமா பேசறீங்க!" என்றாள் நமுட்டுச் சிரிப்புடன்.

"உன் சிரிப்பே சொல்லுதே..!"

"சரி! நான் தான் வம்பு பண்றேன்னு தெரியுதுல்ல? எங்க வீட்டுல கம்ப்ளெய்ண்ட் பண்றதுதானே? இந்த விளையாட்டு பிடிச்சிருக்கப் போய்த் தானே ஜன்னல் வழியா எங்கேயாவது நம்ம ஆள் முகம் தெரியுதான்னு காலையில் பரக்கப் பரக்கப் பார்க்கத் தோணுது?"

வாயடைத்துப் போனேன்.

"அதுதான் சின்னப் பொண்ணை அவள் வீட்டில் காட்டிக் கொடுத்து அவளோட பெயரைக் கெடுக்க விரும்பாத பெருந்தன்மைன்னு வச்சுக்கலாமா?" என்று அவளே அடி எடுத்துக் கொடுத்தாள்.

"எஸ். அஃப்கோர்ஸ்" என்றேன்.

"அடேயப்பா! என்ன ஒரு நேர்மை. அப்படின்னா ஐயா ஜன்னலை மூடிக்கிட்டு தூங்கறதுதானே? ஜாரி எப்போ வருவா, தண்ணி எப்போ தெளிப்பான்னு எதுக்கு ஜன்னலைத் திறந்து வச்சிட்டுக் காத்திருக்கணும்?"

"என்னது? ஜாரியா? அப்படின்னா?"

"என்ன சார் காலேஜ்ல வேலை பார்க்கறதா வேற சொல்றீங்க; ஜாரி தெரியாது? நம்ம சைட்டுன்னு அர்த்தம்"

"மைண்ட் த வேர்ட்ஸ். நான் ஒண்ணும் ஜன்னலை உனக்காகத் திறந்து வைக்கலை. உங்கப்பா வீடா கட்டியிருக்கார்? குகை. இருக்கற இந்த ஒரே ஜன்னலையும் மூடிட்டா மனுஷன் காத்தே இல்லாம சாக வேண்டியதுதான்"

"ஓஹோ! எங்க வீடு குகையா? அப்பாகிட்ட இன்னிக்கே சொல்றேன். தனி மனுஷனுக்கு தண்ணி, பாத்ரூம், லெட்ரின்னு எல்லாவற்றையும் மாடியிலேயே

தனியா கட்டிக் கொடுத்தா இதுவும் பேசுவீங்க, இன்னமும் பேசுவீங்க. உங்களை எல்லாம் காமன் லெட்ரின் வாசல்ல வாளியோட மணிக் கணக்கா நிற்க வச்சிருந்தா இந்தப் பேச்சு வருமா? எங்கப்பாவுக்கு நல்லா வேணும். இன்னிக்கே சொல்றேன். காத்தா வேணும்? அவர்கிட்ட சொல்லுங்க. ஏ.ஸி. பண்ணிக் கொடுப்பார்"

என்னுள் சர்வமும் அடங்கியது. இந்த நிமிடத்தில் இந்த வீட்டை விட்டு வெளியே அனுப்பப்பட்டால் எங்கே தங்குவேன்? இவ்வளவு சீப்பாக வசதியான இடமும் கிடைக்குமா என்ன?

கையெடுத்துக் கும்பிட்டேன்.

"தாயே பார்வதி..."

"பார்வதி இல்லை ரேவதி"

"ஏதோ ஒரு வதி. தாயே, தயவு செஞ்சு என் இருப்பிடத்தில் கை வைத்துவிடாதே அம்மா. தெரியாமல் சொல்லிவிட்டேன். எதையும் மனசில் வச்சுக்கிடாதே. உனக்கு என்ன சந்தேம்னாலும் கேளு. உக்காரு. நின்னிட்டே இருக்கியே"

சிரித்தபடியே உட்கார்ந்தாள்.

"ம்! இந்த மரியாதை என்னிக்கும் இருக்கட்டும்"

ராட்சஸி!

"இந்த ஈக்வேஷன்ஸ் ஸால்வ் பண்ணணும்னா முதலில் எல்லாவற்றையும் சைபருக்கு ஈக்வேட் பண்ணி எழுதணும். எப்படி?" என்றபடியே நிமிர்ந்தேன்.

ரேவதி தன் கன்னங்களை உள்ளங்கைகளில் ஊன்றிய படி என்னையே, என் முகத்தையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளுடைய குறுகுறுத்த பார்வை என்னை என்னவோ செய்தது. எனக்குள் ஏதோ ஓடியது. பார்வையா அது?

விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த அது இது என்கிறார்களே, இதுதானா?

சட்டென்று கலைந்து, "ரேவதி! கவனிக்கிறாயா, இல்லையா?" என்றேன் குரலில் கொஞ்சம் அதட்டல் கலந்து.

"நல்லாவே கவனிச்சிட்டிருக்கேன்"

"ஷட்டப். நான் கேட்டது, பாடத்தை"

"நீங்க சொல்லிட்டே போங்க"

"நீ கவனிக்காத பட்சத்தில் உனக்கு சொல்லிக் கொடுக்கறது வேஸ்ட்"

அவள் தன் நிலையில் சிறிதும் மாற்றம் இல்லாமல் பார்வையின் குறுகுறுப்பை சிறிதும் குறைக்காமல் இயந்திர கதியில் பேசுவது போல் பேசினாள்."

"ஏன் வேஸ்ட்?"

“நான் பாடம் சொல்லிக் கொடுத்தால் ஏதாவது பிரயோஜனம் இருக்கணும்”

“பிரயோஜனம்னா?”

“நான் சொல்லித் தந்த பிறகு அந்தக் கணக்கை உனக்குப் போடத் தெரிந்திருக்கணும்”

“சரி”

“என்ன சரி? நீ இப்படி நினைப்பை எங்கேயோ தூக்கி வச்சுக்கிட்டு இருந்தேன்னா எப்படிப் போட முடியும்?”

“போட முடியும். இப்போதே கூடப் போட முடியும். அந்தக் கணக்கின் விடையும் தெரியும்”

“வாட்? என்று அதிர்ந்தவனாக நோட்டினை மூடிவிட்டு எழுந்தேன்.

அவள் நிதானமாய் நிமிர்ந்தாள்.

“மாணவி கவனிக்கிறாளோ இல்லையோ அவளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியது வாத்தியார் கடமை”

“அது.. தெரியாத பிள்ளைகளுக்கு”

“எனக்கும் தெரியாது”

“இப்போ தெரியும்னு சொன்னியே”

“சும்மா சொன்னேன்”

எனக்கு சிரிப்பு வந்தது.

“ரேவதி! நீ என்ன நினைச்சிட்டிருக்க உன் மனசில?”

அவள் ஒன்றுமே பேசாமல் தன் புத்தகங்களை எடுத்துக் கொண்டாள். எழுந்து வாசலருகே போனாள். மெல்ல திரும்பி, ‘‘என்ன நினைச்சிட்டிருக்கேன்னா கேட்டீங்க? உங்களைத்தான். அல்லும் பகலும் காலேஜிலும் தனிமையிலும் மற்றவர் மத்தியிலும் விழிப்பிலும் உறக்கத்திலும் ஏன் கனவிலும் உங்களைத்தான் நினைச்சிட்டிருக்கேன்”, என்றவளாக நடக்க ஆரம்பித்துவிட்டாள்.

நான் திகைப்பு கலைந்தபோது அவள் இல்லை. போய்விட்டிருந்தாள்.

அன்றே பால்கியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். அவனிடம் இவ்வளவு நாள் மறைத்ததே தவறு. அவனிடம் ஆதியோடு அந்தமாகச் சொல்லி கருத்து கேட்க வேண்டும். அவன் சொல்வது சரியாக இருக்கும்.

நீண்ட நேர யோசனைக்குப் பின் சட்டையை மாட்டிக் கொண்டு பால்கியைத் தேடிச் சென்றேன். அவனுடைய அப்பா தான் கடையில் இருந்தார்.

“பால்கியா? அவன் வெளியூர் போயிருக்கான் சார், சரக்கு எடுத்து வர. நாளை மறுநாள்தான் வருவான். வந்த உடனே உங்களை வந்து பார்க்கச் சொல்றேனே”

மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்களை வெளியே உடனே கொட்டிவிட

முடியாதபடி பால்கி வெளியூர் போய்விட்டான். என்ன செய்வதென்றே புரியவில்லை.

ஒருபுறம் அதுவும் நல்லதற்கென்றே தோன்றியது. நாளை ரேவதி வந்தால் அவளுடன் உட்கார்ந்து ஆற அமர பேசிப் பார்த்துவிட்டு என் குழப்பங்களுக்குத் தெளிவு ஏற்பட்ட பிறகு பால்கியிடம் கலந்து கொள்ளலாம் என்று தோன்றியது.

மறுநாள் காலை துணி காயப் போட ரேவதி வரவில்லை. அன்று மாலை படிக்கவும் வரவில்லை. எனக்கு இருப்பே கொள்ளவில்லை. ஏன்? ஏன் வரவில்லை? ரேவதிக்கு என்ன ஆயிற்று? உடல் நலமில்லையா? நேற்று நன்றாக இருந்தாளே! இருபத்துநான்கு மணி நேரம் பார்க்காமல் இருக்க முடியவில்லையே, என்ன படபடப்பு இது? என்ன வகையான உணர்வு இது?

ரேவதி! ரேவதி! என்றே மனம் துடிக்க ஆரம்பித்தது. அவள் பற்றிய நினைவே எண்ணம் முழுதும் வியாபித்திருக்க இரவு உணவு கூட செல்லாமல் அப்படியே தூங்கிப் போனேன்.

மறுநாளும் அப்படியே. ரேவதி கண்ணிலேயே படவில்லை. வெளியூர் எங்கும் போய்விட்டாளா? சொல்லாமலா போவாள்? சே!

என்னுடைய அன்றைய அவஸ்தை மிகவும் பரிதாபமாக இருந்தது. கல்லூரியிலேயே பார்ப்பவர்களெல்லாம் என்ன சார், எனிதிங் ராங் என்று கேட்க ஆரம்பித்த நிலை உருவானது.

மாலை கல்லூரி விட்டு வந்தபோது நேராக அவளுடைய போர்ஷனுக்குத்தான் போனேன். ஏதோ வேகத்தில் காலிங் பெல்லைக் கூட அழுத்திவிட்டேன்.

கதவைத் திறந்தது, ரேவதியின் அம்மா.

"என்னங்க சார்?"

என்ன கேட்பதென்று தெரியாமல், "எனக்கு லெட்டர் ஏதும் வந்ததா?" என்று கேட்டேன் அபத்தமாக.

"என்ன சார் புதுசா கேட்கறீங்க. உங்க லெட்டர்கள் உங்க போர்ஷனுக்குத்தானே வரும்?"

"ஆமாம். ஆனா இன்னிக்கு ஒரு முக்கியமான லெட்டர் ஒன்று வரணும். என் போர்ஷனுக்கு வரவில்லை. அதான் போஸ்ட்மேன் உங்க வீட்டில் தவறுதலா போட்டுட்டானோன்னு..." என்று வழிந்துவிட்டு மாடிக்குச் சென்றேன்.

இரவெல்லாம் நெடுநேரம் தூக்கம் இல்லை. ஏதேதோ சிந்தனைகள். கண்டகண்ட கற்பனைகளும் வந்து போயின. மன உணர்ச்சிகளுக்கு வடிகால் இல்லாமல் எப்போது தூங்கினேன் என்றே தெரியவில்லை.

காலை எழுந்து குளித்து கல்லூரி கிளம்ப தலை வாரிக் கொண்டிருந்தபோது கதவின் அருகில் ஏதோ நிழல்.

திரும்பினேன்.

"நான் உள்ளே வரலாமா?" என்று கேட்டபடி நின்றிருந்தாள் ரேவதி.

தொ

நான் திகைத்துத் திணறி மூச்சடைத்து நின்றதற்குக் காரணம் இருந்தது.

ரேவதி முழு அலங்காரத்தில் இருந்தாள். அவள் அழகைப் பன் மடங்கு உயர்த்திவிடும் ரோஸ் நிறப் புதுச்சேலை. குளித்த புது மலராய் மெலிதான மேக்கப். கழுத்தில் கூடுதலாய் ஒரு செயின். காதுகளில் ஆடிக் கொண்டிருந்த தொங்கட்டான்கள். உருண்ட முகத்தின் அழகு மேலும் அழகு பெற தீபம் போன்ற பொட்டு. கைகளில் சிறு தட்டு. அதில் கேக், சாக்லேட் மற்றும் இனிப்பு வகைகள்.

என்ன விசேஷம்?

“ரேவதி...” என்றேன். அதற்கு மேல் பேச்சு வரவில்லை.

இரண்டு நாட்களாக நான் பட்டிருந்த அவஸ்தைகள் மொத்தமாக திரும்பி ஞாபகத்தில் வந்து தாக்க, நிற்க முடியாமல் சட்டென்று நாற்காலியில் அமர்ந்தேன்.

“சார்! எனக்கு இன்னிக்கு பர்த் டே”

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. ஏதும் பேசாமல் அவளையே பார்த்தேன். என்னை என்னதான் செய்வதாக உத்தேசம் என்று கேட்காமல் கேட்ட என் விழிகளில் தெரிந்த உணர்வுகளை அவள் படித்திருக்க வேண்டும்.

மெல்லிய கொலுசொலி எழ மெல்ல என் அருகில் நடந்து வந்தாள். கையில் இருந்த தட்டினை மேசை மீது வைத்தாள்.

“என்ன சார்? இரண்டு நாளா என் மீது கோபமா?”

நான்மௌனம் சாதித்தேன்.

“அன்னிக்கு ஏதும் தப்பாப் பேசிட்டேனா?”

“இல்லை” என்றேன் ஒற்றைச் சொல்லில்.

சட்டென்று என் அருகில் வந்து நின்று என் தலையை அணைத்தவளாகத் தன் மீது சாய்த்துக் கொண்டாள். தன் நாடியை என் தலையின்மீது ஊன்றியபடி பேசினாள்:

“சார்! நான் உங்க மீது விளையாட்டகவோ கண்டதும் காதல் ரகமாகவோ ஒன்றும் பிரியம் வைக்கவில்லை. ஆற அமர யோசித்து நீண்ட நாட்களா உங்க நடத்தைகளைக் கவனித்து உங்க பண்பில், அப்புறம் உங்க அழகில் தோற்றத்தில் மயங்கி அதன் பிறகே பழகுவதற்கான வாய்ப்புகளை வலிய ஏற்படுத்திக் கொண்டு பழக ஆரம்பிச்சேன். உங்களுடைய குடும்பப் பின்னணி எல்லாமே எனக்குத் தெரியும். உங்க ஃபிரெண்டு பால்கி எங்க குடும்ப நண்பர்தான். அவர் உங்களுக்காக வீடு கேட்டு வந்தப்போ அப்பாவிடம் சொல்லிட்டிருந்த எல்லா விஷயங்களும் என் காதில் விழுந்தன. என்ன ஒரு உறுதி உங்களுக்கு. உங்க மேல இருக்கும் பொறுப்பின் கனம் எனக்கு உங்கள் மீது பெரிய மரியாதையை ஏற்படுத்தியதால்தான் எப்படியும் உங்க அன்பைச் சம்பாதித்தே தீர்வதுன்னு கங்கணம் கட்டிட்டு உங்களைச் சுற்றிச் சுற்றி வந்தேன். இந்த என் பிறந்த

நாளில் சொல்றேன் பாரதி சார்! உங்க மனபாரங்களுக்கு நிச்சயமா நான் ஒரு சுமைதாங்கிக் கல்லா இருப்பேன். உங்க மனக் களைப்புகளுக்கு நான் ரிலாக்சேஷன் தருவேன். உங்களில் பாதியாய் நிச்சயம் இருப்பேன். என் மேலும் என் வார்த்தைகளின் மீதும் உங்களுக்கு நம்பிக்கையும் காதலும் நிஜமாகவே இருக்குமென்றால் இன்று மாலைக்குள் எனக்கு ஏதாவது பிறந்த நாள் பரிசு கொடுங்கள். உங்க அலாரம் டைம்பீஸ் இன்று மாலை ஆறு மணிக்கு அடித்ததென்றால் என்னை அழைக்கிறீர்கள் என்கிற அர்த்தத்தில் நான் மேலே வருகிறேன். இல்லை என்றால் நான் மாடிக்கு வருவது இதுவே கடைசி முறையாக இருக்கட்டும்.." என்று குரல் கம்மச் சொல்லி முடித்தவள் என் தலையை அவள் மேலிருந்து விலக்கி சட்டென்று என் கன்னத்தில் முத்தம் ஒன்று தந்து "ஐ லவ் யூ ஸோ மச் பாரதி சார்" என்று கூறிவிட்டு விடுவிடென்று சென்றுவிட்டாள்.

அன்று கல்லூரிக்கு லீவு போட்டுவிட்டு பால்கியிடம் சென்றேன். அவன் அன்றுதான் ஊரிலிருந்து வந்திருந்தான். என்னைப் பார்த்ததும், "ரெண்டு நாள் முந்தி வந்திருந்தியாமே, அப்பா சொன்னார். சாயங்காலம் நானே உன்னைப் பார்க்க வரணும்னு இருந்தேன். என்ன விஷயம்? இன்னிக்கு நீ காலேஜுக்குப் போகலியா? எதும் பிரச்சினையா? உடம்புக்கு ஏதாவது? நல்லாத்தானே இருக்க?" என்று அடுக்கிக் கொண்டே போனான்.

தயங்கித் தயங்கி எல்லாவற்றையும் சொன்னேன். முதலில் கேலி செய்ய முயன்றவன், முழுவதையும் கேட்டுவிட்டு, மிகவும் சீரியஸாகிவிட்டான்.

கடைசியில் ஒரு பெருமூச்சு விட்டவனாகக் கேட்டான்:

"என்ன முடிவு பண்ணி இருக்கிறாய்?"

"என்னுள் ரேவதி இரண்டறக் கலந்துவிட்டாள்னு அந்த இரண்டு நாளில் உணர்வு பூர்வமா தெரிஞ்சுக் ஷகிட்டேன் பால்கி. ஒரே வாக்கியத்தில் சொல்லணும்னா இனிமேல் ரேவதி இல்லாமல் எனக்கு வாழ்க்கை இல்லை" என்றேன். என் குரலில் இருந்த உறுதி எனக்கே வியப்பைத் தந்தது.

கொஞ்ச நேரம் மௌனமாக எதையோ சிந்தித்தபடி இருந்த பால்கி, என் தோள்களைத் தட்டிக் கொடுத்தான்" வெல்! நீ அவள் மீது கொண்டிருப்பது, உடலுக்கு அப்பாற்பட்ட ஓர் ஈர்ப்பு. கீப் இட் அப். என்ன ஆனாலும் உனக்கு நான் துணை இருப்பேன்" என்றான்.

மாலை ஆறு மணிக்கு அலாரம் வைத்தேன். அடுத்த சில நிமிடங்களில் மேலே வந்தாள் ரேவதி.

அவளிடம் ஒரு சிறிய குங்குமச் சிமிழை நீட்டினேன்.

"ரேவதி! நானும் யோசித்துப் பார்த்தேன். நான் எது வாங்கிக் கொடுத்தாலும் உன் வீட்டாருக்குத் தெரிந்துவிடும். வீணாக அவர்கள் சந்தேகத்துக்கு இப்போதே ஆளாக வேண்டாம். அவர்கள் அறியாதபடி நிறைவாக ஆழமாக அழுத்தமாக உனக்குக் கொடுக்க வேண்டும் என்றால் ஒன்று முத்தம் அல்லது பொட்டு. முதலாவதை நீ எனக்குக் காலையில் கொடுத்துவிட்டாய். அதையே திருப்பித்

தர எனக்கு மனமில்லை. அதோடு திருமணத்துக்கு முன் அதெல்லாம் சரியில்லை என்று கூட நினைப்பவன் நான். எனவே தான் இந்த குங்குமச் சிமிழ். இதனை நீ யாரும் அறியாமல் உன் கைப் பையில்கூட வைத்துக் கொள்ள முடியும். இன்று மூன்று அம்மன் கோயில்களுக்குப் போனேன். உன் பெயரில் அர்ச்சனை செய்தேன். அந்தக் குங்குமம் தான் இதில் உள்ளது" என்று நீட்டினேன்.

அவள் சிலிர்த்துப் போய், "நீங்களே வைத்துவிடுங்கள்", என்று நின்றாள்.

அந்த நாளுக்குப் பின் எங்கள் நெருக்கம் மனத்தளவில் வளர்ந்து கொண்டே போனது.

"இன்று அம்மாவுக்குக் கடிதம் போட்டீர்களா?"

"கடைசித் தங்கைக்கு எக்ஸாம் நடந்ததே, என்ன மார்க்காம்?"

"நடுத் தங்கைக்குப் பிறந்த நாள் வருதே, என்ன வாங்கிக் கொடுக்கப் போறீங்க?"

கிட்டத்தட்ட மனைவி போல் உரிமையோடு அதிகாரங்கள் செய்ய ஆரம்பித்தாள். என்னையும் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றினாள். என் உடைகளில் மாறுதல்கள் செய்தாள். எனக்காகத் தானும் மாறினாள். எனக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக சில உடைகள் அணிவதையே தவிர்த்தாள். இன்னும் நிறைய, நிறைய...

என் கவலைகளை அக்கறையோடு பகிர்ந்து கொண்டாள். நிறையத் தேற்றினாள். மனதுக்கு நிறைய உறுதி தந்தாள்.

சில சமயங்களில் சீண்டி விளையாடினாள். வெறியேற்ற முயற்சித்துத் தோற்றாள். எல்லாவற்றிலுமே என் எண்ணங்கள், விருப்பங்களை முன் வைத்தே நடத்தினாள்.

அப்படி ஒரு நாளில் நாங்கள் அருகருகே அமர்ந்து ஒருவர் கைக்குள் அடுத்தவர் கையைக் கோர்த்தபடிப் பேசிக் கொண்டிருந்தபோது அவள் அப்பாவிடம் பிடிபட்டோம்.

அவள் அப்பா என்னை நிறுத்தி வைத்து என் கண் முன்னாலேயே அவளை அடி அடி என்று அடித்தார். அவர் அடித்த ஒவ்வொரு அடியும் 'உன்னை அடிக்க முடியலையேடா பாவி, அதனால்தான் நான் செல்லமாய் சீராட்டி வளர்த்த என் கண்மணியை அடித்து நொறுக்குகிறேன்" என்று சொல்லாமல் சொல்லின.

"உன்னை கண்ணியமானவன் என்று நினைத்தேன். பூனை வேஷம் போட்ட அயோக்கியன். உண்ட வீட்டுக்கே ரெண்டகம் நினைத்த துரோகி. உன்னை இத்தனை நாள் குடி வைத்ததற்காக யாகம் நடத்தி தோஷம் போக்கணும் நான். இன்னும் எனக்கு வெறி வந்து ஏதாவது நடப்பதற்குள் நீயாகவே வீட்டைக் காலி செய்து விட்டுப் போய்விடு" என்று தரக்குறைவாக ஆர்ப்பாட்டம் செய்தார்.

மிகவும் அசிங்கமாக உணர்ந்தேன். சே! என்ன ஒரு இழிநிலை! ஒரு பெண்ணை மனதார விரும்பியதற்கா? நான் என்ன மாற்றான் மனைவியையா விரும்பினேன்?

மீண்டும் பால்கி தான் உதவினான். அவரிடம் சமாதானம் செய்து இந்த விவகாரத்தை இத்துடன் மூடி மறைத்து விடும்படியும் இன்னும் அவர் கிளப்பினால் எனக்கு கல்லூரியில் கேவலம் என்றும் ரேவதிக்கு எதிர் காலமே பாழாகிவிடும் என்றும் அவருக்குப் புரிய வைத்து என்னை அந்த வீட்டினைக் காலி செய்ய வைத்தான். இப்போது நான் இருக்கும் வீட்டினை அமர்த்திக் கொடுத்தான்.

ஊரின் மறு கடைசி. ரேவதி வீட்டுக்கு சம்பந்தமே இல்லாத தூரம்! அவளுடைய அப்பா ஒரு வழியாக சாந்தமானார்.

ஆனால் உருவங்கள் தான் இடம் பெயர்ந்தனவே தவிர எங்கள் இருவராலுமே ஒருவரை ஒருவர் மறக்க முடியவில்லை.

அடுத்த மூன்றாம் நாளே ரேவதி என்னைத் தேடிக் கொண்டு பால்கியுடன் வந்துவிட்டாள்.

என் மேல் சாய்ந்து ஓவென்று கதறி அழுதவளைத் தேற்ற படாதபாடு பட வேண்டி இருந்தது. என்னுடைய கஷ்டங்களுக்குத் தானே பொறுப்பு என்பது போல் ஃபீல் பண்ணி அவள் அழுதது சங்கடமாக இருந்தது.

நடந்ததற்கு அவள் சிறிதும் பொறுப்பு அல்ல என்றும் எங்கள் நட்பு, காதல் எல்லாம் பால்கியின் உதவியுடன் ரகசியமாகத் தொடரும் என்றும் என் தங்கைகள் திருமணத்திற்குப் பின் எப்படியும் திருமணம் செய்து கொண்டு வடக்கே எங்காவது போய்விடலாம் என்றும் உறுதி கொடுத்து அவளைத் தேற்றி அனுப்பி வைத்தேன்.

எங்கள் பழக்கம் தொடர்ந்தது. பால்கி தவிர வேறு யாருக்கும் தெரியாத காதல்!

அவள் தற்கொலை செய்து கொள்வானேன்!

இரண்டு நாட்களுக்கு முன் சந்தித்தபோது கூட ஏதும் சொல்லாமல்?

அப்படி ஏதாவது அவசரக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துவிட்டார்களா அவள் வீட்டில்? நான் என் தங்கைகளின் திருமணம் முடிந்தபிறகு தான் எங்கள் திருமணம் என்று சொல்லி இருந்ததால் வேறு வழியே இல்லை என்று தற்கொலைக்கு முயன்று விட்டாளா?

அப்படி ஏதாவது என்றால் பால்கி அவர்களுடைய குடும்ப நண்பன்தானே, அவனுக்குத் தெரியாமல் இருந்திருக்க நியாயம் இல்லையே. ரேவதியே அவனிடம் ரகசியமாகத் தன் பிரச்சினையைக் கோடி காட்டி இருக்க முடியுமே?


கடந்த இரண்டு நாட்களில் கண்ணீர் வடிந்து வடிந்து வற்றிப் போய் இருந்தாலும் உணர்வுகள் உள்ளே பொருமிக் கொண்டு தான் இருந்தன, எரிமலைக் குழம்பு போல.

அப்போது தான் என் பெயருக்குத் தபால் ஒன்று வந்தது.

அனுப்பியவர் முகவரியைப் பார்த்தால்...

ரேவதி! ூ

# 5



## தலையணையை அவன் முகத்தின் மீது வைத்து ஏறி உட்கார்ந்து கொண்டேன்

அந்தக் கடிதத்தை அசுவாரசியமாகத்தான் எடுத்தேன். அதில் முகவரி எழுதி இருந்த கையெழுத்து என்னுள் மின்சார அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

ரேவதியா? எனக்குக் கடிதம் எழுதி இருக்கிறாளா?

பரபரப்பாகப் பிரித்தேன்

பிரியமுள்ள பாரதி சாருக்கு,

இந்தக் கடிதம் உங்கள் கைகளில் இருக்கும் போது நான் உயிருடன் இருக்கமாட்டேன். என் பிணத்தை இறுதியாக ஒரு முறை பார்க்கக் கூட நீங்கள் வருவீர்களா அல்லது எங்கள் வீட்டு சூழ்நிலையின் இறுக்கம் கருதி வராமலேயே இருந்துவிடுவீர்களா என்று எனக்குத் தெரியவில்லை. மேற்கொண்டு இந்தக் கடிதத்தைத் தொடரும் முன் இரண்டு வேண்டுகோள்கள். தயவு செய்து இந்தக் கடிதத்தைத் தனிமையில் படியுங்கள். படித்து முடித்தவுடன் என் மீது ஆணையாகக் கிழித்து எரித்து விடுங்கள்.

உங்கள் மீதான நம்பிக்கையில் தொடர்கிறேன். என் மரணம் எல்லோருக்கும் கேள்விக்குறியாகத் தான் இருக்கும். ஏன், உங்களுக்கும் கூட. மற்றவர்களுக்குக் காரணம் தெரியாமல் இருக்கலாம். ஆனால் நீங்கள் தெரிந்து கொண்டே ஆக வேண்டும்.

உங்களுடன் இவ்வளவு நாள் பழகியும் நீங்கள் உங்களுடைய பிறந்த தினத்தை எனக்குச் சொன்னதே இல்லை. எனக்கு அதனை உங்களுக்குத் தெரியாமல் அறிந்துகொண்டு அன்றைக்கு உங்களை வியப்பில் ஆழ்த்த வேண்டும் என்கிற எண்ணம் இருந்தது. உங்கள் நண்பர் பால்கியிடம் கேட்டுப் பார்த்தேன். அவர் தெரியாது என்று சொல்லிவிட்டார். அவர் உங்களிடம் கேட்க முயற்சித்தபோது கூட நீங்கள் ரேவதி கேட்டுச் சொல்லச் சொன்னாளா என்று சிரித்துக் கொண்டே மறுத்துவிட்டீர்கள் என்று சொன்னார். நீங்கள் மறுக்க மறுக்க என் க்யூரியாஸிட்டி கூடிக் கொண்டே போனது.

ஒரு முறை உங்களுடன் வேலை பார்ப்பவர் என்று ரூபச் சந்திரன் என்பவனை நீங்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்த நினைவு வந்தது. அவன் தங்கியிருக்கும் இடத்தை அவன் அப்போது சொல்லியிருந்ததும் நினைவில் இருந்தது.

பெண்மையின் மடத்தனமான வேகத்தில் அவனிடம் போய் உங்களுக்குத் தெரியாமல் உங்கள் பிறந்த நாளை அறிந்து சொல்லும் படிக் கேட்கப் போன இடத்தில்.. நான் என்னையே இழக்கும்படி நேர்ந்துவிட்டது பாரதி சார்...

இதனை நான் உங்களிடம் சொன்னால் என்ன செய்வீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக என்னைக் கை விட்டுவிட மாட்டீர்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால், உங்களைப் போன்ற தூய ஆத்மாவுக்கு நான் ஏற்றவளில்லை என்பதால் நான் இந்த உலகத்தை விட்டே போகிறேன்.

ஆவி உலகில் இருந்தாலும் உங்கள் நலனிலேயே அக்கறையுடன் இருப்பேன்.

என் மரணத்துக்குக் காரணம் உங்களுக்கு மட்டும் தெரிந்ததாக இருக்கட்டும். உங்கள் நெருங்கிய நண்பருக்குக் கூடச் சொல்லி என் மரணத்தை விவாதப் பொருளாக்கி விடாதீர்கள்.

வேறு ஒரு நல்ல பெண்ணாகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து உங்கள் எதிர்கால வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.

ரூபச் சந்திரன் போன்ற பாவிகள் எல்லாம் ஏன் தான் உயிருடன் இருக்கிறார்களோ! அந்த ஆண்டவன் தான் அவனுக்கெல்லாம் தண்டனை தரணும்.

உங்கள் நல் வாழ்வை மட்டுமே நாடும்,

என்றும் உங்கள்,

ரேவதி

கடிதத்தைப் படித்து முடிக்க, என்னுள் என்னென்னவோ உணர்ச்சிகள். நம்பவே முடியாமல் இன்னும் ஒரு முறை படித்தேன்.

முதலில் கடிதத்தைப் பிரித்தபோது, நல்லா ஏமாந்தீங்களா... என்ற வகையில் விளையாட்டுத்தனமாக ஏதாவது எழுதி இருக்கமாட்டாளா என்கிற நப்பாசை என்னுள் இல்லாமல் இல்லை. ஆனால் படிக்கப் படிக்க அதில் இருந்த நிஜமும், பயங்கரமும் என்னுள் இன்னவென்றறியாத ஏதேதோ உணர்வுகளைக் கொட்டின. எல்லாவற்றிற்கும் இறுதியாய் சுழன்று சுழன்று வந்து மத்தியில் விழுந்த பொட்டாய் ரூபச் சந்திரன் மீது ஆத்திரம் பொங்கிப் பிரவாகம் எடுத்து நின்றது.

ரேவதி கேட்டுக் கொண்டபடி அந்தக் கடிதத்தை எரித்தேன். ரேவதி நல்லவள். கடிதம் ஒரு சாட்சியாக இருந்து எதிர்காலத்தில் எனக்குப் பிரச்சினைகள் வரக் கூடாது என்று சாவில் கூட நினைத்தவள்.

அவளை...

ரூபச்சந்திரா...

மனதில் ஆத்திரம் விசுவரூபம் எடுத்தது. நீ எல்லாம் ஒரு மனிதனா? உடன் வேலை செய்பவனின் காதலியை அனுபவிக்க உனக்கு மனதும் வருகிறதா? உன்னை என்ன செய்தால் என்ன?

யோசித்துக் கொண்டே இருந்தேன்.

திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவனாகக் கடிகாரத்தில் மணி பார்த்தேன். பனிரெண்டரை.

மத்தியான வேளைக்குக் கல்லூரியில் போய் நின்றேன்.

என் அறைக்குள் நுழைந்தபோது ரூபச் சந்திரன் மூன்று பெண்கள் சூழ உட்கார்ந்திருந்தான். அந்த மாணவிகளிடம் ஏதோ வம்பு பேசிக் கொண்டிருந்தான்.

நான் கூடியவரையில் என்னை இயல்பாக மாற்றிக் கொண்டு என் நாற்காலியில் போய் உட்கார்ந்தேன்.

"ஹலோ மிஸ்டர் பாரதி! என்ன இரண்டு நாளா லீவு? உடம்புக்கு ஏதாவது?"

வெறுமனே புன்னகைத்தேன்.

"ஓ.கே. உங்களை அப்புறம் பார்க்கிறேன். நௌ யூ ஆல் கோ" என்று அந்தப் பெண்களை அனுப்பினான்.

"சார்! நான் வேணும்னா ஈவினிங் உங்க ரூமில் வந்து வாங்கிக்கறேன் சார்" என்று இழுத்தாள் ஒரு பெண்.

"ஈவினிங் எங்காவது வெளியே போயிருப்பேன். நீங்க ஒரு ஏழரை மணிக்கு மேல வாங்க" என்றான் ரூபச் சந்திரன்.

அவர்கள் போனதும் என் பக்கமாகத் திரும்பி, "பார்த்தீங்களா பாரதி! எல்லாப் பொட்டைகளும் துளுத்துப் போயிட்டாளுக. ஈவினிங் என் ரூமுக்கே வந்து வாங்கிக்கறாளாம். இதில் என்னைப் போய்க் குறை சொல்றீங்க.." என்று சிரித்தான்.

"ஆனா சும்மா சொல்லக் கூடாது. என்னைப் பற்றி நல்லா தெரிஞ்சு வச்சிருக்காளுங்க. இங்கே வரும்போதே சேலையையோ, சுடிதார் முந்தானையையோ அட்ஜஸ்ட் பண்ணாம ஒருத்தியும் வர்றதில்லை. வேற வழியில்லாம நானும் பார்த்திட்டு மார்க் போட வேண்டியதாயிடுது..." என்று போலியாக அலுத்துக் கொண்டான்.

நான் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மௌனம் சாதித்தேன்.

"என்ன பாரதி! ஒண்ணும் பேச மாட்டேங்கறீங்க, மனசு சரியில்லையா?"

"இல்லை. யோசிச்சிட்டிருந்தேன். உங்க ரூமுக்கு எந்த மாதிரியான பொண்ணுங்கள் வர்றாங்க. அவங்களை நீங்க என்னென்ன செய்வீங்கன்னு.."

ரூபச் சந்திரனின் முகம் மாறியது வெளிப்படையாகத் தெரிந்தது.

"அதெல்லாம் சஸ்பென்ஸ். நீங்க சாமியார். அதெல்லாம் தெரிஞ்சு நீங்க என்ன செய்யப் போறீங்க?" என்று போலிச் சிரிப்புடன் கேட்டான்.

"சரி, அதைவிடுங்க. இன்னிக்கு ஈவினிங் எங்கேயும் வெளியே போறீங்களா?"

"ஏன்? என் ரூமுக்கு வர்றீங்களா? யூ ஆர் மோஸ்ட் வெல்கம். உங்க மாதிரியான புண்ணிய ஆத்மா பாதம் பட்டாவது என் ரூம் பாவங்கள் நீங்கிப்

புனிதத்துவம் அடையட்டும்"

"அந்தப் பொண்ணு கிட்டே எங்கோ வெளியே போறதா..."

"அது சும்மா, ராத்திரியில் வரவழைப்போமேன்னு தான். அவள் சொல்ற நேரத்துக்கு நாம் காத்திருந்தோம்னா கொஞ்சம் இளப்பமா நினைக்க ஆரம்பிச்சிடுவா இல்லையா? அதான் கொஞ்சம் பந்தா"

"சாயங்காலம் வர்றேன்"

"யூ ஆர் வெல்கம்"

"உங்க கிட்ட ஸ்டிரெய்ட் கொஸ்டின் ஒண்ணு கேட்கணும்"

ரூபச் சந்திரன் முகம் தீவிரமாக, என்னைப் பார்த்தான்.

"கேளுங்க பாரதி"

"உங்க ரூமில் வந்து கேட்கிறேன்", என்று கூறிவிட்டு புத்தகத்தில் ஆழ்ந்தேன்.

மாலை வரை கல்லூரியில் எல்லோரிடமும் இயல்பாகப் பழகினேன்.

மூன்றரை மணி வாக்கில் பிரின்ஸிபால் அழைத்துப் பேசினார். பொருட்காட்சிக்கு இன்னும் பனிரெண்டு நாட்கள் தான் இருக்கின்றன என்று ஞாபகப்படுத்தினார். பணிகளைத் துரிதப்படுத்தும்படிக் கேட்டுக் கொண்டார். என் திட்டங்களை விவரித்துச் சொன்னபோது பாராட்டினார். என்ன உதவி வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளலாம் என்று ஊக்கம் அளித்து விடை கொடுத்தார்.

சாயங்காலம் ஐந்தரை மணி வாக்கில் ரூபச்சந்திரன் அறைக்குச் சென்றேன்.

சர்வ ஜாக்கிரதையாக நான் செய்த காரியம் அதுதான். சுற்றிலும் பார்த்துப் பார்த்துத் தான் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தேன். யாரும் என்னைப் பார்க்கவில்லை அல்லது கவனிக்கவில்லை என்கிற உறுதி ஏற்பட்ட பிறகுதான் அவன் அறையையே நெருங்கினேன்.

அமைதியான சந்து அது. பின் மாலை நேரம் ஆகையினால் நடமாட்டம் கிட்டத்தட்ட இல்லை. என்னை பிரத்தியேகமாகக் கவனிக்க என்று ஆள் போட்டிருந்தால் ஒழிய யாரும் என்னைப் பார்த்திருக்க வாய்ப்பு இல்லை.

கதவை மெல்லத் தட்டினேன்.

ரூபச் சந்திரன் திறந்தான்.

"வாங்க" என்றான்.

நுழைந்து கதவைத் தாளிட்டேன்.

"ஆச்சர்யமா இருக்கு வந்திட்டீங்க. நான் கூட நீங்க சும்மாத்தான் சொல்றீங்க, இங்கெல்லாம் வரமாட்டீங்கன்னே நினைச்சேன்" என்றான்.

"ரூபச் சந்திரன்! ரேவதி இங்கே வந்திருக்கிறாளா?" என்றேன் கூடிய வரை குரலை இயல்பாக்கிக் கொண்டு

"ரேவதி" என்றான், ஒரு கள்ளச் சிரிப்புடன். திடீரென்று சீரியஸாகி "பாரதி! அந்த ரேவதி பற்றி நானே உங்ககிட்ட சொல்லணும்ன இருந்தேன். ஒரு நாள்


அந்தப் பொண்ணு இங்கே வந்து... ஐ யம் சாரி! அது என்னையும் மீறி நடந்திட்ட அசம்பாவிதம்" அதற்குமேல் சொல்லத் தயங்கி உதட்டைக் கடித்தான்

அவன் சற்றும் எதிர்பார்க்காத கணத்தில் என் பலமெல்லாம் திரட்டி ஓங்கி ஒரு குத்துவிட்டேன் அவன் மூக்கில்.

நிலை தடுமாறி அரை மயக்கத்தில் கீழே விழுந்தான் அலறக் கூட அவகாசம் இன்றி.

பேண்ட் பாக்கெட்டுகளுக்குள் கைகளை விட்டு இரண்டு கர்ச்சீப்களை எடுத்து இரண்டு கை விரல்களிலும் சுற்றிக்கொண்டேன். ஒரு தலையணையை எடுத்தேன். அவன் முகத்தில் வைத்தேன். அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டேன்.

# 6



## கதவு திறக்கப்பட்டபோது நான் மூர்ச்சை ஆகாதது ஆச்சரியம்

**வா**சலில் நிழலாடியதைக் கண்டு நிமிர்ந்தேன்.

ப்யூன்!

"என்னப்பா?"

"உங்களை பிரின்ஸிபால் கூப்பிட்டார் சார்"

படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடினேன். அதை மேசை இழுப்பறையில் வைத்துப் பூட்டிவிட்டு எழுந்தேன்.

"என்ன விஷயம்?" என்று கேட்டேன் வெகு இயல்பாக.

"நம்ம ரூபாச் சந்திரன் சார் இறந்திட்டாராம் சார்."

"வாட்?" என்று அதிர்ந்தேன். எனக்குள் மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி. வேகமாக ரூபச் சந்திரனின் மேசையைப் பார்த்தேன்.

"ஓ காட்! நல்லாத் தெரியுமாப்பா? எதையாவது சொல்லி வைக்காதே. அவர் இன்னிக்கு வரலைன்ன உடனே லீவுன்னு நினைச்சேன்" என்றேன் பதற்றமாக.

"என்னங்க சார்! இவ்வளவு சீரியஸான விஷயத்தை அவ்வளவு அலட்சியமா சொல்வேனா சார்? அது விஷயமாத்தான் உங்களை அழைச்சிட்டே வரச் சொன்னாங்க. போலீஸ் வந்திருக்கு...." என்று ப்யூன் சொல்லிக் கொண்டே

போக நான் வேக வேகமாக பிரின்ஸிபாலின் அறையை நோக்கி நடந்தேன்.

வெளியே போலீஸ் ஜீப் ஒன்று நின்றிருந்தது.

பிரின்ஸிபால் அறையின் வாசலில் நின்றிருந்த இன்னொரு ப்யூன் என் வரவுக்குக் காத்திருந்தவன் போல் கதவைத் திறந்துவிட்டான்.

உள்ளே பிரின்ஸ்பாலுக்கு எதிரே உட்கார்ந்திருந்த போலீஸ் அதிகாரிதான் இன்ஸ்பெக்டராக இருக்க வேண்டும். சற்று தள்ளி நேற்று ரூபச் சந்திரனிடம் ரூமில் வந்து புத்தகம் வாங்கிக் கொள்வதாகச் சொன்ன பெண் நடுக்கத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

என்னைப் பார்த்ததும், "வாங்க சார்!" என்று உட்கார வைத்தார்கள்.

"இவர் இன்ஸ்பெக்டர் பிரசாத்" என்று உட்கார வைத்தார்கள்.

"இவர் இன்ஸ்பெக்டர் பிரசாத்" என்று அறிமுகப்படுத்தினார் பிரின்ஸிபால். "இவர் மிஸ்டர் பாரதி"

இருவரும் கைகுலுக்கிக் கொண்டோம்.

"ஒரு சோகமான விஷயம். உங்க கலீக் மிஸ்டர் ரூபச் சந்திரன் இஸ் டெட்" என்றார் பிரின்ஸிபால் மெதுவாக.

"வரும்போது ப்யூன் சொன்னான் சார்" என்றேன் சோகத்தைக் குரலில் தேக்கி.

"ஒரு போலீஸ் அதிகாரியா என் கடமையைச் செய்ய நீங்க ஒத்துழைப்பு தந்தீங்கன்னா நல்லது மிஸ்டர் பாரதி."

"பை ஆல் மீன்ஸ் சார்" என்றேன்.

"இந்தப் பெண்ணைத் தெரியுமா?"

நிமிர்ந்து பார்த்தேன்.

"தெரியும். பெயர் ஞாபகம் இல்லை."

"பூர்ணிமா."

பூர்ணிமா தேம்பித் தேம்பி அழுது கொண்டிருந்தாள்.

"ப்ளீஸ் காம் யுவர்செல்ஃப் பூர்ணிமா. இப்போ என்ன, ஃபார்மல் என்க்வைரி தானே நடக்குது. ஏன் பயப்படற?" என்று தேற்றும் குரலில் சொல்லிக் கொண்டிருந்தார் பிரின்ஸிபால்.

"எக்ஸ்க்யூஸ்மீ சார்ஸ்" என்றேன் பொதுவாக, என் பயத்தையும் பதற்றத்தையும் மறைத்தபடி.

என் பக்கமாய்த் திரும்பினார்கள்.

"எனக்கு எதுவுமே புரியவில்லை. வாட்'ஸ் கோயிங் ஆன் ஹியர்?"

"சாரி! உங்களிடம் முதலிலேயே சொல்லி இருக்கவேண்டும். மிஸ்டர் ரூபச் சந்திரனின் மரணம் கொலையா இருக்குமோன்னு இவர் சந்தேகிக்கிறார்..."

என்ற பிரின்ஸிபால் இழுக்க, "கொலையா இருக்குமோன்னு சந்தேகம் இல்லை. அது கொலையேதான். அதனால்தான் விசாரணை", என்ற இடைமறித்தார் இன்ஸ்பெக்டர்.

எனக்கு குப்பென்று வியர்த்தது. மென்று விழுங்கினேன். வியர்வையைத் துடைக்க கர்ச்சீஃப் எடுக்கக் கூட பயம் ஏற்பட்டது. இன்ஸ்பெக்டரின் கவனம் என் மீது திரும்பிவிடக் கூடாதே என்கிற பதற்றம் கூடவே இருந்தது. அது இன்னும் வியர்வையை அதிகமாகச் சுரக்க வைத்தது. நல்ல வேளையாக அவர் பூர்ணிமாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"இதில் நான் எங்கே வருகிறேன் என்று..."

"வெல். சொல்லிவிடுகிறேன். கொலை நேற்று நடந்திருக்கிறது. ஆனா இன்னிக்கு அதிகாலையில்தான் எங்க டிபார்ட்மெண்டுக்கு நியூஸ் தெரியும். நியூஸ் கொடுத்தது இந்தப் பெண்ணோட அப்பா..."

எனக்கு வியப்பாக இருந்தது.

"சொல்லும்மா. நீ இதுக்கு முன்னால என்ன சொன்னியோ அதை இன்னொரு தடவை சொல்லு" என்றார் பூர்ணிமாவைப் பார்த்து.

"நேற்று சாயங்காலம் ஏழரை மணி வாக்கில் என்னை அவர் வீட்டுக்கு வரச் சொல்லியிருந்தார் சார். அதுக்காகப் போனேன்."

"எத்தனை மணிக்குப் போனே?"

"ஏழே முக்காலுக்குப் போனேன். வீடு அமைதியா இருந்தது. கதவு கொஞ்சமாகத் திறந்திருந்தது. சார், சார்னு கூப்பிட்டு பார்த்தேன். பதிலே இல்லை. கதவைத் திறந்திட்டு உள்ளே போனேன். சார் கீழே விழுந்து கிடந்தார். பார்த்த மாத்திரத்திலேயே இறந்துகிடக்கார்னு தோணிச்சு. பயந்து போய் வீட்டுக்கு ஓடிட்டேன்."

"உடனே ஏன் எங்களிடம் சொல்லலை?"

"பயம்மா இருந்தது.." பூர்ணிமா தேம்பியவாறே தொடர்ந்தாள். "வீட்டுலேயும் யாரிடமும் சொல்லலை. ராத்திரியெல்லாம் தூக்கமில்லாமல் கண்ட கண்ட கனவும் வந்து பயமுறுத்துச்சு. எனக்கு ரொம்ப பயமாகி ஒருமுறை மயக்கமே போட்டுட்டேன். அப்புறம் வீட்டில் ரொம்ப அழுத்திக் கேட்டாங்க. அப்பா, அம்மாகிட்டே மட்டும் சொன்னேன். அப்பாதான், அசடே, இதையெல்லாம் போலீஸுக்கு உடனே தெரிவிக்க வேண்டியது நம்ம கடமைன்னு சொல்லி அவங்களுக்கு ஃபோன் பண்ணினார். இதுதான் சார் நடந்தது. சத்தியமா எனக்கு வேற ஒண்ணும் தெரியாது..."

இன்ஸ்பெக்டர் பிரசாத்தின் முகத்தைப் பார்த்தேன். நம்பிக்கையின் சாயல் துளிக்கூட இல்லாத மாதிரி இறுகி இருந்தது. என்னுடைய உள் நடுக்கம் வெளித் தெரிந்துவிடுமோ என்கிற பதற்றத்தில் நான்.

"நீ ஏன் அத்தனை மணிக்கு அங்கே போனே?"

"அவர் வரச் சொல்லியிருந்தார்"

"அதுதான் ஏன்னு கேட்கறேன்"

"ஒரு புக் கேட்டிருந்தேன். வீட்டில் வந்து வாங்கிக்கோன்னு சொன்னார்"

"ஏன் ராத்திரி போனே?"

"அவர்தான் சாயங்காலம் வெளியே போயிடுவேன். ஏழரைக்கு மேலேதான் ரூமில் இருப்பேன்னு சொன்னார்."

"இதுக்கு முன்னால் எப்போதாவது அவர் ரூமுக்குப் போயிருக்கிறாயா?" மென்று விழுங்கியவாறே யோசித்தாள்.

"போயிருக்கிறேன்."

"எத்தனை முறை?"

"இரண்டு முறை"

"ம். அப்போதும் புத்தகம் வாங்கத்தானா?" மௌனம் சாதித்தாள்.

"நேற்று நீ போனபோது எந்த டிரஸ் போட்டிருந்தாய்?"

"ரெட் கலர் சுரிதார்."

"இப்போ அந்த டிரஸ் எங்கே இருக்கு?"

"என் வீட்டில் என் பாத்ரூமில் அழுக்குக் கூடையில் இருக்கு."

"இன்னும் துவைக்கலியே?"

"இல்லை சார்"

"ம். அப்புறமா வீட்டுக்குப் போகும்போது என்னிடம் எடுத்துக் கொடு"

"சரி சார்"

"நேற்று உன்னை ரூபச் சந்திரன் வீட்டுக்கு வரச் சொன்னபோது இவரும் இருந்தார்னுதானே சொன்ன?"

அவள் என்னை நிமிர்ந்து பார்த்து, "ஆமாம் சார்" என்றாள். கண்களாலேயே என்னிடம், 'இல்லை என்றோ கவனிக்கலை என்றோ சொல்லிடாதீங்க சார்' என்று கெஞ்சினாள்.

என் பக்கமாகத் திரும்பினார் பிரசாத். இவ்வளவு நேரத்தில் நான் முழுக்க சுதாரித்திருந்தேன்.

"மிஸ்டர் சாரதி"

"பாரதி"

"எஸ் மிஸ்டர் பாரதி! இந்தப் பொண்ணு சொல்றது..."

"நிஜம்தான் சார். நேற்று நான் காலையில் லீவு போட்டிருந்தேன். மத்தியானம் என் அறையினுள் நுழையும்போது ரூபச்சந்திரன் இந்தப் பெண் உள்பட மூன்று பெண்களிடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போ இந்தப் பெண்ணிடம் ஏழரை மணி வாக்கில் ரூமுக்கு வா என்றார்."

"நீ கொஞ்சம் வெளியே நில்லும்மா", என்று அவளை வெளியே

அனுப்பிவிட்டு என்னிடம் திரும்பினார். "மிஸ்டர் ரூபச் சந்திரன் எப்படி?" என்றார்.

நான் தயங்கினேன்.

"இறந்து போன ஒருவர் பற்றி அவதூறு பேசுவதாக எண்ணித் தயங்காதீர்கள். ஒரு கொலைகாரன் பிடிபடணுங்கிற நல்ல எண்ணத்தில் சொல்லுங்க. உங்க மாதிரி படிச்சவங்க ஒத்துழைப்பு தரத் தயங்கினா நாங்க எப்படி இன்வெஸ்டிகேட் பண்றது?"

எனக்கு பகீரென்றது.

"கேளுங்க சார்."

"குட். மற்றவர்களை விட உங்களுக்கு நல்லா தெரிஞ்சிருக்க வாய்ப்பு உண்டு. ஏன்னா ஒரே ரூமில் கடந்த ஆறு மாதமா உட்கார்ந்திருக்கீங்க. சொல்லுங்க, அவர் எப்படிப்பட்ட குணம்? குறிப்பாக பெண்கள் விஷயத்தில்"

"பெண்கள் விஷயத்தில் அவர் ரொம்ப வீக்னு நினைக்கிறேன். எப்போ பார்த்தாலும் பெண்கள் பற்றி நிறைய பேசுவார்."

"ஓ..." என்று யோசித்தார்.

"தன்னைச் சந்திக்க வர்ற பெண்களிடம் தவறாக நடந்து கொள்ள..."

"நோ.. என் அறையில் நிச்சயமாக அவர் அப்படி முயற்சி செஞ்சதில்லை. ஆனா அவர்களைப் பற்றி அவங்க போனபிறகு அங்க அங்கமா வர்ணிச்சுப் பேசுவார். அதிலே ஒரு மாதிரியான இன்ட்ரஸ்ட் அவருக்கு."

"இது காமனா நிறைய ஆண்களிடம் உள்ள குணம்தானே? ஸ்பெஷலா ஏதாவது..."

ரேவதியின் கடிதம் நினைவுக்கு வந்தது.

"அப்படி ஏதும் தெரியலை சார்"

"இந்தப் பொண்ணு எப்படி?"

"தெரியாது."

யோசித்தார்.

"ஓ.கே. கொஞ்சம் உங்க ரூமுக்குப் போகலாமா? ரூபச் சந்திரன் மேசையைப் பார்க்கணும்."

எழுந்து நடந்தோம்.

வழியில் மெல்லக் கேட்டேன்: "சார்! அவர் எந்த மாதிரி கொலை செய்யப்பட்டிருக்கிறார்?"

"அவர் முகத்தில் தலையணை வைத்து யாரோ அழுத்தி இருக்கிறார்கள்." உள்ளுக்குள் உறைந்து போனேன்.

விசாரணை விசாரணை என்று அடுத்த இரண்டு நாட்களும் கல்லூரி அல்லோலப்பட்டது. மூன்றாம் நாள்தான் போலீஸ் வாபஸ் ஆனது.

நாங்கள் ஆசிரியர்கள் சார்பில் ரூபச் சந்திரனுக்கு மலர்வளையம் வைத்தோம். மீட்டிங் போட்டு அவனுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றினோம். அதன்பிறகு தினப்படி அலுவல்களில் ஈடுபடத் தொடங்கினோம்.





எனக்கு மட்டும் ரூபச்சந்திரனின் வெறும் இருக்கையைப் பார்க்க என்னவோ போல் இருந்தது. அவனுக்கு நேர்ந்த கதி எனக்குள் ஏராளமான குழப்பங்களை உண்டு பண்ணி இருந்தது. திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல் அல்லது ஊமை கண்ட கனவு போல் எவருடனும் கலந்து கொள்ள முடியாத இயலாமை வேறு என் மனச்சுமையை அதிகரித்துக் கொண்டிருந்தது.

பால்கியிடம் பேசுவதற்கு என்னிடம் மிக முக்கியமான விஷயம் ஒன்று இருந்தது. ஆனால் அந்த விஷயம் பேசப் போய் நான் மறைக்க நினைத்துள்ள மற்ற விஷயங்கள் வெளி வந்துவிட்டால்? பால்கியைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகிவிட்டதைப் போல் ஓர் உணர்வு. அவனிடம் பேசலாமா? என்னதான் உயிர் நண்பன் என்றாலும் இந்த விஷயம் வெளிப்படையாக விவாதிக்கக் கூடிய விஷயமா என்ன?

குழம்பியபடி உட்கார்ந்திருந்தேன்.

“சார்! உங்களுக்கு போன் வந்திருக்கிறது” என்று ப்யூன் வந்து துறைத் தலைவரின் அறைக்கு அழைத்துச் சென்றான்.

“ஹலோ பாரதி திஸ் ஸைட்”

“பாரதி! நான் பால்கி.”

“வாவ்! உனக்கு ஆயுசு நூறுடா. இப்போதான் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன். சொல்லு என்ன விஷயம்?”

“உன்னிடம் ஒரு முக்கிய விஷயம் பேசணும். இன்னிக்கு ஈவினிங் என் ரூமுக்கு வர்றியா?”

“என்ன பால்கி? எனிதிங் சீரியஸ்?”

“ஈவினிங் காலேஜ் முடிஞ்சதும் வா. சொல்றேன்.”

போன் வைக்கப்பட்டது மறுமுனையில்.

எனக்கு வியப்பு. நான் அறிய இத்தனை நாட்களில் பால்கி பதற்றமாய் பேசி நான் கேட்டதில்லை. இப்போது என்ன ஆயிற்று?


மாலை வரை மற்ற கல்லூரிப் பணிகளில் நேரம் வேகமாக ஓடிவிட, கல்லூரி முடிந்ததும் என் அறைக்குக் கூடப் போகாமல் நேராக பால்கியின் அறைக்குத்தான் போனேன்.

அது ஒரு தனி அறை மாதிரி. சிறிய வீடு. பால்கிக்கான பிரத்தியேக அறை. பால்கியின் வீட்டில் நிறைய பிள்ளைகள். கூட்டுக் குடும்பம் வேறு. பால்கி பொறுப்புகள் மிகுந்தவன் என்பதால் நிறைய வேலைகள் பார்ப்பவன். ராப்பகலாக அலைபவன். அவனுக்கு பிரைவஸி வேண்டும் என்பதற்காகவும் ஒரு சிறிய கோடவுன் மாதிரி இருப்பதற்காகவும் அமர்த்தப் பட்ட அறையாகும் அது. எனக்குத் தெரிய பால்கியின் அப்பா கூட அங்கே வருவது கிடையாது. முக்கால்வாசி முறை எங்கள் சந்திப்பு இங்குதான் நிகழ்வது வழக்கம். பிரச்சினைகள் ஆனபிறகு ரேவதியை நான் சந்தித்துப் பேசுவதும் பலமுறை இங்குதான்.

போய்க் கதவைத் தட்டினேன். கதவு திறக்கப்பட்டபோது நான் மூர்ச்சை அடையாமல் இருந்தது மிகவும் ஆச்சரியமான விஷயம்.

ரேவதி முழுசாய் நின்றபடி என்னைப் பார்த்து புன்னகையுடன், “உள்ளே வாங்க பாரதி சார்” என்று அழைத்தாள்.

# 7



**கத்தி முனையில் நடக்கிற த்ரில். அகப்பட்டுக் கொள்ளாதவரை வாழ்க்கை...**

என்னுள் அந்த கணத்தில் ஏற்பட்ட உணர்வு வியப்பா, காதலா, அதிர்வா, பதற்றமா, தன்னிரக்கமா, அயர்வா என்று கேட்டால் பதில் சொல்ல முடியாத கலவை உணர்வு.

என் கண்களையே நான் நம்ப முடியாத நிலை.

"ரே... ரேவதி! நீயா..." என்ற கூக்குரலுக்கு மேல் வார்த்தைகளே வரவில்லை.

அவளிடம் எந்தச் சலனமும் இல்லை. வேலை வெட்டி இல்லாத மகன் வெளியே சுற்றிவிட்டு இரவு வீடு நுழையும்போது பார்க்கும் தந்தையைப் போல் சலனமின்றிப் பார்த்தாள். "உள்ளே வாங்க முதலில்", என்றாள்.

இயந்திரமாய் உள்ளே நுழைந்தேன்.

"வா... பாரதி" என்ற பால்கியின் குரல் மட்டும் இல்லாவிட்டால் கதவைத் தாளிட்டுக் கொண்டிருந்த ரேவதியை ஒரு வித ஆவேசத்தில் கட்டியே பிடித்திருப்பேன்.

"பால்கி! ரேவதி சாகலைடா! ஷி இஸ் அலைவ். ஓ காட்! எனக்கு என்ன சொல்றதுன்னே..." என்ற வார்த்தைகள் திணற அவன் கைகளைப் பிடித்துக் கொண்டேன்.

அவனும் ரேவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"பாரதி! நீ ரொம்ப எக்ஸைட் ஆகி இருக்கிறாய். உன்னிடம் முக்கியமான விஷயம் ஒண்ணு பேசணும். நீ இப்போ இருக்கிற ஸ்டேஜில் பேச முடியாது போலிருக்கிறதே. காம் யுவர்ஸெல்ஃப் ஃபர்ஸ்ட்" என்றான் பால்கி.

அவனுடைய குரல் அழுத்தமாகவும் இயந்திர கதியில் இருந்ததையும் நான் முதலில் கவனிக்கவில்லை.

"ரேவதி! யூ ஆர் அலைவ். எவ்வளவு தூரம் நம்ப முடியாத உண்மை..." என்று முணுமுணுத்துக் கொண்டேன். எதுவுமே எனக்குப் புரியவில்லை.

மெல்ல மெல்ல பரபரப்பு அடங்கி எனக்குள் நிறைய கேள்விகள் எழ ஆரம்பித்தன.

"பால்கி! இவ இறந்து விட்டதாகவும் நீயே பார்த்ததாகவும் சொன்னியே" என்று முதல் கேள்வியைக் கேட்டேன்.

(தொடர்ச்சி 55ம் பக்கம்)

(35ம் பக்கத் தொடர்ச்சி...)

பால்கி என்னை நேர்ப் பார்வை பார்த்து, "அது பொய்" என்றான்.

திடுக்கிட்டேன்.

"பால்கீ..."

"ஆமாம். அது திட்டமிட்ட பொய்."

"ஏன் சொன்னாய்?"

"நீ உன் மற்ற சந்தேகங்களையும் கேட்டு முடி. உனக்கே தெரிய வரும்."

எனக்குள் ஒரு குரல் ஐயோ செத்தேன் என்றது. அப்போ, ரூபச் சந்திரன் சொன்னதெல்லாம்...? மை காட்!

இன்னும் சுற்றுப்புறம் புரியவில்லை. என்ன நடக்கிறது இங்கே? இவன் என்ன சொல்கிறான்?

"பால்கி..."

"கேள்"

"இவளிடமிருந்து எனக்கு வந்த கடிதமும் அதிலிருந்த விஷயங்களும் கூட....."

"எங்களின் கூட்டுத் திட்டம்தான்."

எனக்குள் 440 வோல்ட் மின்சாரம் பாய்ந்த அதிர்ச்சி.

"எ... எதற்கு?"

பால்கி புன்னகை செய்தான்.

"கடிதம் கிடைத்ததும் நீ என்ன செய்தாய்?"

எனக்குள் ஏதோ அபாயச் சங்கு ஊத, உஷாரானேன்.

"ஒன்றும் செய்யவில்லை"

"ஒரு கொலை?"

என் உடம்பு சில்லிட்டது.

"நோ"

"ரூபச் சந்திரனை நீ கொல்லவில்லை?"

என் கைவிரல்களின் நடுக்கத்தை மறைக்க பேண்ட் பாக்கெட்டினுள் விட்டுக் கொண்டேன்.

"இல்லை"

பால்கி ரேவதியைப் பார்க்க, அவள் மெல்ல சிரித்தபடியே மேடை இழுப்பறையைத் திறந்து ஒரு கவரை எடுத்துப் போட்டாள். பால்கி அதைப் பிரித்து என்னிடம் நீட்ட வாங்கிப் பார்த்தேன்.

போட்டோக்கள்.

ரூபச் சந்திரனை நான் முகத்தில் குத்துகிறேன்.

கர்ச்சீஃபைக் கைகளில் சுற்றுகிறேன்.

தலையணையை எடுக்கிறேன்.

ரூபச்சந்திரன் முகத்தின் மீது வைக்கிறேன்.

ஏறி உட்கார்ந்திருக்கிறேன்.

"நோ" என்று அலறினேன்.

இருவரும் பதில் ஏதும் பேசவில்லை.

"இது திட்டமிட்ட சதி" என்றேன்.

"கரெக்ட். உண்மை. நாங்கள் இருவரும் திட்டமிட்ட சதி. எல்லாமே எங்கள் திட்டப்படி மிகச் சரியாக நடந்திருக்கிறது."

"அடப் பாவிகளா! புனிதமான நட்பையும் காதலையும் அப்பாவியான என்னையும் எவ்வளவு மோசமான பகடைக் காய்களா யூஸ் பண்ணி உருட்டி விளையாடி இருக்கீங்க. உருப்படுவீங்களா?" என்று கத்தினேன்.

"கொஞ்ச நேரம் உன் ஆத்திரம் தீர எங்களைத் திட்டித் தீர். அப்புறம் என் பேச்சைக் கேட்கும் தயார் நிலைக்கு வந்து சேர்."

"அதுவரைக்கும் நாம் என்ன செய்யறது பால்கி?" என்றவளாக அவனை நெருங்கி அவன் தோள்களில் கை போட்டாள் ரேவதி.

"அவனைத் தொடாதே" என்று கத்தினேன்.

என்னைப் பார்த்து இளப்பமாய்ச் சிரித்தாள். "என் லவ்வரை நான் தொடாமல் யார் தொடுவா?"

"லவ்வரா? அடிப்பாவி! எத்தனை லவ்வர்டி உனக்கு?"

"என்னுடன் இத்தனை நான் பழகியதற்காக இந்த வார்த்தைகளை மன்னிச்சுக்கிறேன். இருந்தாலும் கொஞ்சம் வார்த்தைகளை அளந்து பேசுங்க பாரதி சார்"

இத்தனைக்கும் தனக்கும் சம்பந்தமே இல்லாதது போல் பால்கி அவளுடைய காதோர முடிக் கற்றைகளில் ஏதோ ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தான்.

எனக்கு சூழ்நிலையின் தாக்கம் புரிய கொஞ்ச நேரம் ஆனது. நடுக்காட்டில் தனித்துவிடப்பட்ட சிறுவன் போல் உணர்ந்தேன். லவ்வாடா கேட்குது லவ்வு என்றொரு குரல் உள்ளுக்குள் கேலி செய்தது. அடுத்து என்ன செய்வது என்பது குறித்து ஓர் எதிர்கால பயம் வந்தது. பேசாமல் போலீஸில் சரணடைந்து விடலாமா என்று ஒரு கணம் யோசித்தேன். அம்மா மற்றும் தங்கைகளின் ஞாபகம் வந்து அந்த எண்ணத்துக்கு அணை போட்டது. ஐயோ! காதல் வேகத்தில் கொலை செய்யும் முயற்சி வரை போனபோது எங்கே போனார்கள் இந்த அம்மாவும் தங்கைகளும்? இப்போது வருகிறதே அவர்கள் ஞாபகம்!

அழவேண்டும் போல் தோன்றியது. நோ. அழக் கூடாது. படித்த படிப்புக்கு, பார்க்கும் வேலைக்கு, சாமான்யன் ஒருவனிடமும் பொட்டச்சி ஒருத்தியிடமும் தோற்றவன் அழக்கூடாது. என்னதான் நடக்கும் என்று பார்த்துவிடுவோமே!

நீண்ட நேர சிந்தனைக்குப் பிறகு நிமிர்ந்தேன்.

"பால்கி! உன் மனசாட்சிக்குத் தெரியும் நான் ரூபச் சந்திரனைக் கொல்லவில்லை என்று. அதையாவது ஒப்புக் கொள்வாயா?" என்று கேட்டேன்.

* * *

ரூபச் சந்திரனின் முகத்தின் மீது தலையணையை வைத்து அதன் மீது ஏறி உட்கார்ந்த மறுவிநாடியே என் மனசாட்சி விழித்துக் கொண்டது.

மடையா! என்ன காரியம் செய்கிறாய்? கொலையா? உன் குடும்பம், அம்மா, தங்கைகள் என்று உன்னையே நம்பி ஊரில் இருப்பவர்களை மறந்துவிட்டாயா? என்று உள்ளுக்குள் அலறியது ஓர் அபாயச் சங்கு.

தலையணையில் இருந்து கீழே இறங்கினேன். அதனை எடுத்துவிட்டு ரூபச் சந்திரனை விடுவித்தேன்.

நல்லவேளையாக ரூபச் சந்திரனுக்கு ஏதும் ஆகவில்லை. மூர்ச்சை தெளிந்தாற்போல் எழுந்து உட்கார்ந்தான். மரணத்தின் வாய் வரையில் சென்று மீண்ட அதிர்ச்சி அவன் முகம் முழுவதும் பரவி இருந்ததைப் பார்க்க எனக்குள் ஒரு கணம் ரேவதியையும் மறந்து இரக்கம் பிறந்தது.

"ஐயம் சாரி!" என்றேன் அவனை ஏறிட்டுப் பார்க்கும் தெம்பு இல்லாமல் வேறெங்கோ முகத்தைத் திருப்பிக் கொண்டு.

அவன் ஏதும் பேசாமல் மேசைக்கு நடந்து அதன் மீதிருந்த தண்ணீர் பாட்டிலை முகத்தில் கவிழ்த்துக் கொள்ளாத குறையாகக் குடித்துக் காலி செய்தான். இன்னொரு பாட்டிலை எடுத்து என்னிடம் நீட்டினான்.

எனக்குமே தண்ணீர் தேவையாக இருந்தது.

அடுத்த நிமிடம் இரண்டு பேருக்குமே என்ன செய்வது என்று புரியவில்லை.

"பாரதி சார்! என்னைக் கொல்லும் அளவுக்கு உங்களுக்கு வெறி ஏன் என்று எனக்குப் புரியவில்லை. நான் காரணம் தெரிந்து கொள்ளலாமா?"

எனக்கு மீண்டும் மூச்சிரைத்தது.

"ரூபச்சந்திரன் சார்! உங்களைக் கொல்ல இருந்து கடைசி வினாடியில் நான் விட்டுவிட்டேன் என்பதற்காக நீங்கள் உத்தமர் என்று நான் ஒப்புக் கொள்வதாக அர்த்தம் ஆகிவிடவில்லை" என்றேன் பொருமலுடன்.


"பாரதி சார்! நான் உத்தமன் என்று சொல்லவில்லை. நான் கெட்டவன்தான். பல பெண்களுடன் விபரீதமாக விளையாடியவன்தான். ஆனால் அதில் நீங்க பர்ஸனலா பாதிக்கப் படற அளவுக்கு நான் ஏதும் செய்யவில்லையே..."

"பாவி! என் அன்புக் காதலி ரேவதியை என்னடா செஞ்ச?"

"ஓ! அந்த ரேவதி..." என்று சிரித்தான் ரூபச்சந்திரன்.

எனக்குள் மீண்டும் கோபம் துளிர் விட ஆரம்பித்தது.

"சற்றுப் பொறுங்கள் பாரதி சார்! என்ன நடந்ததுன்னு சொல்லிடறேன்.



அந்த ரேவதி என்னிடம் வந்தது நிஜம். ஒரு உதவி வேண்டி வந்தார்கள். அவர்கள் உங்களை உயிருக்குயிராக விரும்பினார்களாம். நீங்கள் அவர்களின் காதலை ஏற்றுக் கொள்ளாமல் ரொம்பவும் அலட்சியப் படுத்தியபடி இருக்கிறீர்களாம். அதனால் சினிமா பாணியில் உங்களுக்குப் பொறாமை ஏற்படுத்துவதற்காக என் மீது அவர்களுக்குக் காதல் ஏற்பட்டு விட்டதாகவும் அதனால் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்துவிட்டதாகவும் உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்களாம். அதைப் படித்துவிட்டு உங்களுக்கு என் மீது கோபம் வந்து விசாரிக்க முயற்சித்தால் நான் பிடி கொடுக்காமல் பேசவேண்டும் என்றும் அப்போதுதான் உங்கள் மனதில் அவர்கள் மீது உள்ள உண்மையான காதலை வெளிப்படுத்துவீர்கள் என்றம் கேட்டுக் கொண்டார்கள். சரி என்று ஒத்துக் கொண்டேன். அதுவும் பாரதி சார் மீதான அன்பு மற்றும் மரியாதை காரணமாக. அந்தப் பெண் மீதும் எனக்கு நல்ல மரியாதை ஏற்பட்டிருந்தது. ஆனால் எனக்கு என்ன புரியவில்லை என்றால், இந்த சாதாரண விஷயத்துக்காக என்னைக் கொலை செய்யும் அளவுக்கு உங்களுக்குக் கோபம் ஏற்பட்டது ஏன் என்பதுதான்."

ரூபச்சந்திரன் சொன்ன விளக்கம் எனக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியது. ரேவதியின் கடிதத்துக்கும் இவன் சொல்வதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறதே!

"மிஸ்டர் ரூபச் சந்திரன்! இப்போ நான் தெளிவா இருக்கிறேன். தயவு செய்து உண்மையா சொல்லுங்க. ரேவதியை நீங்க ஒண்ணுமே செய்யலையா?"

"வாட் டு யூ மீன் பாரதி? எனக்கு உங்க



கேள்வி புரியவில்லை."

ரூபச் சந்திரனின் கேள்வியில் இருந்த அப்பாவித்தனம் என்னை இன்னும் தெளிய வைக்க எங்கோ ஏதோ தப்பு என்று தெரிந்தது. பால்கியிடம்தான் கேட்கவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு ரூபச் சந்திரனிடம் இன்னொரு முறை மன்னிப்பு கேட்டுக் கொண்டு அங்கிருந்து வெளியேறினேன்.

ஒரு கொலைகாரனாக ஆகி இருக்க வேண்டியவன் மயிரிழையில் தப்பி சுத்தமானவனாக மீள முடிந்தது, பெற்றோர் செய்த புண்ணியத்தால்தான் என்று எண்ணுகையில் பெருமூச்சு எழுந்தது என்னிடமிருந்து.

* * *

"பால்கி! நண்பன் போல் பழகி நயவஞ்சகம் பண்ணிட்ட ஓ.கே. இன்றைய தேதிக்கு நான் உன்னிடம் ஒரு சூழ்நிலைக் கைதி. என்னிடம் என்ன இருக்குன்னு இப்படி ஒரு பிளாக் மெயில்? உன் நோக்கம் என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?" என்றேன் மிகவும் தொங்கிப் போன குரலில்.

"தேர் யூ ஆர்" என்று அவளைப் பிரித்தான் பால்கி.

"பாரதி! ஸ்டில் உன்னை என் நண்பனாகவே நினைக்கிறேன். பட் ஃபார் திஸ் ரேவதி. இவளை மட்டும் நீ மறந்துவிடு. உன்னை இந்த வலைக்குள் இழுக்க இவள் ஒரு கருவியாகச் செயல்பட்டாள்.

அவ்வளவே. இனி நாம் நண்பர்களாகப் பேசுவோம்" என்று ஆரம்பித்தான்.

"கொஞ்சம் விரிவாகவே சொல்கிறேன். கேள். நெடு நாட்களாகவே எனக்குக் கொஞ்சம் கறுப்புக் கைகளுடன் தொடர்பு உண்டு. கஞ்சா விற்பனையிலிருந்து கள்ளக் கடத்தல் வரையில் எனக்கு சகலமும் அத்துபடி. சொல்லப் போனால் இந்தத் தனிவீடு கூட அந்த மாதிரியான இருட்டு வேலைகளுக்காகத்தான். இந்த விஷயம் எங்கள் இருவர் வீடுகளுக்கும் தெரியாது. இவளுக்குக் காலேஜ் படிப்பு. கூடவே நான் சொல்வதை எல்லாம் கேட்டுக் கொள்ளும் ஒரு காதலி. அவ்வளவே.

இப்படி என் தொழில் நல்லபடியாக நடந்துகொண்டிருந்தபோதுதான் உன் நட்பு கிடைத்தது. கூடவே சில புதிய கைகளின் பிஸினஸ் தொடர்பும் கிடைத்தது. பிஸினஸ் என்றால் சில கறுப்பு வேலைகள். கள்ளப் பணத்தைப் புழக்கத்தில் விடுதல், சில கறுப்புக் கைகளுக்கு அடைக்கலம் தருதல், தேவைப்பட்டால் பாம் வைப்பது என்பது போன்ற சிறிய சமூகக் குற்றங்கள்.

இவை எல்லாம் சர்வ சாதாரணமாக என்னால் செய்ய முடிந்தது. அதன் பிறகுதான் எனக்கு அடுத்த கட்ட ஆஃபர் தர முன் வந்தார்கள். சில முக்கிய பிரமுகர்களைக் கொல்வது குறித்த பிஸினஸ் ஆஃபர் அது. யாருக்காகச் செய்கிறோம் என்பது தெரியாது. எதற்காகச் செய்கிறோம் என்பதும் தெரியாது. நாம் எத்தனையாவது கை என்பதும் தெரியாது. கேள்விகள் கேட்கக் கூடாது. நேர்மையாய் உழைத்தால் நாம் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியாத பெரும் பணம். தொழில் சுத்தம் மட்டுமே தேவை.."

பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தேன்.

"கொலை செய்வது என்பது பெரிய சமாசாரம். கஞ்சா விற்பது போல் அவ்வளவு எளிய விஷயம் அல்ல. கொஞ்சம் மூளை வேண்டும். நன்கு திட்டமிட்டுச் செய்ய நல்ல ஆள் துணை வேண்டும். இரண்டுக்கும் ஆன தகுதி உனக்கு இருக்கிறது. எஸ். உன் மூளையை நான் நன்கு அறிவேன். திட்டமிட்டுச் செயலாற்றும் மூளை. ரொம்பவும் படபடப்பாகப் பேசி எதையும் உளறாத அழுத்தம். இவை காரியக்காரனுக்கு உரிய இலக்கணங்கள். அதனால்தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்."

"இதில் ரேவதி எங்கே வருகிறாள்?"

"இது கொலைகார பிஸினஸப்பா. இதற்கு ஒரு பைண்டிங் வேண்டும். அது நட்பை விட ஸ்டிராங்கானதாக, அறுத்துக் கொள்ள முடியாத ஒன்றாக இருக்கவேண்டும். உன்னுடன் அதற்காகத்தான் ரேவதியைப் பழகச் சொல்லி நெருக்கத்தை வளர்த்துக் கொள்ளச் சொன்னேன். என்னுடைய ஆரம்பத் திட்டம் அவளையும் உன்னையும் இசகு பிசகான கோலத்தில் போட்டோக்கள் எடுத்து அவற்றை உன் குடும்பத்துக்கும், கல்லூரி நிர்வாகத்துக்கும் அனுப்பிவிடுவதாகச் சொல்லி மிரட்டுவது என்கிற அளவில்தான் இருந்தது.

ஆனால் அவள் எவ்வளவு முயன்றபோதும் நெருக்கம் என்கிற விஷயத்தில் மட்டும் நீ கண்ணியமான எல்லையை மீற மாட்டேனென்கிறாய் என்று அவள் சொன்ன பிறகுதான் வேறு வகையில் யோசிக்க வேண்டியதாகிவிட்டது. இதற்கிடையில் ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து அவளுடைய வாழ்க்கையின் சீரழிவுக்குக் காரணமாகி இருந்த ரூபச் சந்திரனைத் தட்டி வைக்கச் சொல்லி எனக்கு ஒரு பிஸினஸ் ஆஃபர் வந்திருந்தது. இரண்டையும் ஒன்றாக இணைத்து விடலாம் என்று திட்டமிட்டேன். அப்புறம்தான் இந்த காதல், தற்கொலை, கடிதம், கொலை, போட்டோ எல்லாம். உன்னுடைய பாச உணர்ச்சி என்கிற வீக் பாயிண்ட் ஒன்றுதான் இத்தனைக்குமான மூலதனம். இப்போது பார். இந்த போட்டோக்கள் இருக்கும் வரை நமக்குள் பைண்டிங் விட்டுப் போகாது அல்லவா?"

''நான் ஒன்றும் ரூபச் சந்திரனைக் கொல்லவில்லையே.'' கையாலாகாதவனாக உணர்ந்தேன்.

''நீ பாதியில் விட்டு வந்த காரியத்தை நான் போய் முடிக்க வேண்டியதாகிவிட்டது. ரூபச் சந்திரனுக்கு உயிர் போனால்தானே இந்த போட்டோக்களுக்கு உயிர் வரும்?"

"நான் உன் பேச்சைக் கேட்க மறுத்தால்..."

"போலீஸிடம் போக வேண்டி இருக்கும் என்று நான் சொல்ல விரும்பவில்லை. நீ ஒரு இன்ஜீனியர். லாபமில்லாத எந்தச் செயலும் வீணான ஒன்று என்று உனக்கே தெரியும். நீயாகப் போய் போலீஸில் சரணடைந்தாலும் அதனால் உபயோகம்? யோசித்துப் பார், உன் அம்மா தங்கைகளின் எதிர்பார்ப்புகளை நீயாக என்றைக்கு சம்பாதித்து அவைகளை நிறைவேற்றப் போகிறாய்? பேசாமல் என்னுடன் கைகோர்த்து நட. இதை ஒரு சைடு பிஸினஸ் மாதிரி நினைத்துக் கொள். உன் திறமைக்கு சவால். கத்திமுனையில் நடக்கிற த்ரில். அகப்பட்டுக் கொள்ளாத வரை வாழ்க்கை. அந்த வாழ்க்கை தொடர்வது உன் மூளையின் கூர்மையில், ஏராளமாய்ப் பணம். வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் இருக்க வேண்டாமா?"

யோசித்துக் கொண்டே இருந்தேன்.


"டேக் யுவர் ஓன் டைம். எனக்கு நாளைக்கு முடிவு சொன்னால் கூடப் போதும். உன்னுடைய பெரிய அதிர்ஷ்டம் முதல் கிராக்கி தானாகவே உன் மடியில் வந்து விழுகிறது."

"யாரைச் சொல்கிறாய்?" என்றேன் ஆவலாக.

"நீ இன்னும் நம் கூட்டுக்குள் வரவில்லையே! வந்ததும் சொல்கிறேன்."

"ஒரு நாள் டைம் கொடு. நாளை சொல்கிறேன்" என்று விடை பெற்றேன்.

# 8



**காட்டிக் கொடுக்க முயலாதே. உன் குடும்பம் காணாமல் போய்விடும்**

ரூபச்சந்திரனின் கொலை வழக்கு, அவன் மேசை மற்றும் அறையிலிருந்து எடுக்கப்பட்ட செக்ஸ் புத்தகங்கள், அவன் இளம் பெண்களுடன் நடத்திய கேளிக்கைகள், ஆபாசப் படங்கள் என்று இன்னொரு ஆசிரமக் கதையாக பத்திரிகைகளுக்குத் தீனி போட்டுக் கொண்டிருக்க, அதில் நான் எங்கேயோ எப்போதோ காணாமல் போனேன்.

ஆனால் பால்கி?

"என்ன பாரதி! என்ன யோசிச்ச? என்ன முடிவுக்கு வந்த?"

தயங்கியபடி சொன்னேன்: "ஓ.கே. உன் வழிக்கு வர்றேன். இதில் என் பர்ஸனல் சேஃப்டி எந்த அளவுக்கு உறுதியானது என்பது பற்றிய உத்திரவாதம் வேண்டும்."

பால்கி சிரித்தான். "அபாய விளையாட்டுகளில் பர்ஸனல் சேஃப்டிக்கு அவனவன் மூளைதான் உத்தரவாதம் தரணும். என்னால் உனக்கு அபாயம் வராது என்ற அளவு மட்டுமே நான் உறுதி அளிக்க முடியும்."

"வெல். அடுத்தது பணம். எனக்கு கேஷாக மட்டுமே தரணும். செக், டிராஃப்ட் முதலான வங்கி சமாசாரங்கள் கூடாது."

"அக்ரீட்"

"நான் விரோதத்தை அடியோடு மறந்திடறேன். நம் நட்பு தொடரவேண்டும். என்னதான் நீ நயவஞ்சகமாகப் பழகினாலும் எனக்கு நீ செய்துள்ள பல நன்மைகளால் நீ என் எண்ணங்களில் எங்கோ உயர்ந்த இடத்துக்குப் போய் விட்டாய். அங்கிருந்து ஒரே நாளில் உன்னை இறக்க முடியவில்லை. உன் மிரட்டலை நான் மறந்துவிடுகிறேன். என் வருமானம் உயர்வதற்காக எனக்கு நீ வழி காட்டுவதாகவே எண்ணிக் கொண்டு தப்புக் காரியங்களில் ஈடுபட்டுக் கொள்கிறேன். அதில் நம் நட்பைத் தொலைய விடவேண்டாம் என்று நினைக்கிறேன்."

என் குரல் எனக்கே இரக்கமாக இருந்தது. பால்கி கொஞ்சம் இளகி இருக்க வேண்டும். என்னை அணைத்துக் கொண்டான்.

"சாரி பாரதி! நேற்று உன்னை ரொம்பவும் புண்படுத்தி இருந்தால் என்னை மன்னித்துக் கொள், உன்னிடம் இன்னும் கொஞ்சம் சாஃப்டாக நடந்திருக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது. இன்னொரு விஷயம், நம் நட்பைப் பற்றிச்

சொன்னாயே. பகை உணர்ச்சியை அடி மனதில் வைத்தபடி இந்த மாதிரியான வேலைகளைப் பார்க்க முடியாது. அதோடு நல்லவர்களுக்கு இடையே ஆன நட்பை விட கெட்ட பழக்கம் உள்ளவர்களுக்கு இடையேயான நட்புதான் அதிக இறுக்கத்துடன் இருக்கும். கெட்ட நண்பன்தான் நட்புக்காக உயிரையும் தருவான்...." என்று முழங்கினான்.

அவன் சொன்ன கடைசி வாக்கியம் எனக்கு சிரிப்பை வரவழைத்தது.

"நடந்ததை மற. இன்னொன்று, நீ தப்பாக எடுத்துக் கொள்ளமாட்டாய் என்கிற நம்பிக்கையில் சொல்கிறேன். இவ்வளவு நாள் அன்னியோன்னியமாகப் பழகிவிட்டு இன்று ஆல் ஆஃப் எ சடன் ரேவதியை மறப்பதென்பது மனதளவில் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. ஒரு தோழன் என்கிற முறையிலாவது உன் காதலியுடன் பேச பழக எனக்கு அனுமதி கொடுப்பாயா? நிச்சயமாக கண்ணியம் காப்பேன் என்று உறுதி தருகிறேன்."

அவ்வளவு நேரம் பேசாமல் நின்றிருந்த ரேவதி மெல்ல என் அருகில் வந்து என் வலது கையை எடுத்து முத்தமிட்டு, "ரொம்ப சாரி பாரதி சார்" என்றாள்.

"ரேவதீ..." என்று குரல் கம்மினேன். நீர் நிறைந்த கண்கள் அலைபாய ஏக்கத்துடன் அவளைப் பார்த்தேன். சட்டென்று உணர்ச்சிகளை அடக்க ஒரு டம்ளர் மண்பானைத் தண்ணீர் எடுத்துக் குடித்து அந்த நீரிலேயே முகத்தையும் கழுவிக் கொண்டு, முகத்தில் போலிப் புன்னகையுடன் அவர்கள் எதிரில் வந்து உட்கார்ந்தேன்.

"ம். சொல்" என்றேன் பால்கியிடம்.

பால்கியும் ரேவதியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பர்ல்கி என்னருகில் வந்து என் தோள்களில் தட்டி, "ஆர் யூ ஓ.கே?" என்று கேட்டான்.

"பர்ஃபெக்ட்லி. ம். சொல். எனக்கு முன் உள்ள முதல் பொறுப்பு என்ன? நேற்று ஏதோ கிளி தானாகவே என் மடியில் வந்து விழுவதாகச் சொன்னாயே."

பால்கி குரலைத் தாழ்த்தினான். மெல்ல என் காதுக்கருகில் வந்து சொன்னான்.

"பாரதி! இன்னும் பத்து நாளில் நடக்கப் போகிறதே உங்கள் கல்லூரி கலைக் கண்காட்சி. அதைத் திறந்து வைக்கப் போகும் சீஃப் கெஸ்ட் யார்?"

சொன்னேன்.

"அவர்தான் கிளி"

உறைந்தேன். "மை காட்! அவரை எதற்காக?"

"யாருக்குத் தெரியும்? அரசியல் உலகம் ரொம்பப் பெரியது. ஆழமானது. நமக்கெதற்கு அதெல்லாம்?"

"இதற்காக எனக்கு என்ன தருவாய்?"

காதுக்குள் சொன்னான்.

பெரிய தொகைதான்.

"ஓ.கே."

"ஒரு விஷயம்."

"சொல்"

நீ அகப்பட்டுக் கொண்டால் உதவிக்கு வரமாட்டோம்"

சிரித்தேன். "இதனைச் சொல்லணுமா, என்ன?"

"இது இந்த இயக்க விதிகளில் ஒன்று. நீ என்று இல்லை. இதில் யாருக்கு அந்தக் கணத்தில் ஆபத்து என்றாலும் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு இயக்கத்தின் அரவணைப்பிலிருந்து துண்டிக்கப்பட்டு விடுவார்கள். உனக்கு எச்சரிக்கை செய்ய வேண்டியது என் கடமை. அதோடு இன்னொன்று."

"என்ன?"

"சொல்ல சங்கடமாகத்தான் இருக்கிறது. இருந்தாலும் சொல்லவேண்டிய கடமை. காட்டிக் கொடுக்க முயலாதே. உன் குடும்பம் காணாமல் போய்விடும்."

எதிர்பார்த்த வாக்கியம்தான். இருந்தாலும் முகத்தில் அறைந்தது போல் கேட்டபோது அதிர்வாகத்தான் இருந்தது.

"ஓ.கே."


"பெஸ்ட் ஆஃப் லக்"

"தேங்க்யூ"

"என்ன செய்யப் போகிறாய்?"

"யோசித்த பிறகு காண்டாக்ட் பண்ணுகிறேன்."

# 9



## உடனடியாக ஒரு காரியம் செய்தேன்

அடுத்த நாட்களில் சலனமின்றி இருந்தேன். தெளிவாக சிந்தித்தேன். பொருட்காட்சியின் மொத்த அமைப்புக்கும் தெளிவாக லே அவுட் போட்டுப் போய் பிரின்ஸிபால் மற்றும் கமிட்டி சீஃப் இன்ஜினீயர் ஆகியோரைப் பார்த்து ஒப்புதல் பெற்றேன். எங்கெங்கே எந்தெந்த ஸ்டால் வரவேண்டும் என்று விளக்கினேன். அவர்களுடைய பாராட்டுகளைப் பெற்றுக் கொண்டேன். மாணவர்களைச் சந்தித்தேன். அவர்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்தேன். ஒவ்வொரு குழுவுக்கான பொறுப்புகளையும் விளக்கினேன். அவர்கள் செய்ய வேண்டிய ப்ராஜக்ட்டுகளைப் புரிய வைத்தேன். ஒவ்வொரு ப்ராஜக்ட்டுக்கும் அந்தந்தத் துறையைச் சேர்ந்த லெக்சரர்களை மேற்பார்வைப் பொறுப்பாளர்களாக

நியமித்தேன். ஒரே ஒரு குழுவில் மட்டும் இரண்டு வட இந்திய மாணவர்கள் இருக்கும்படி பார்த்துக்கொண்டேன்.

வேலைகள் ஜரூராக நடக்கத் தொடங்கின. இந்தக் கண்காட்சி ரூபச் சந்திரன் நினைவாக நடத்தப்படுவதாக அறிவிக்கலாமே என்று ஆசிரியர்கள் கூட்டத்தில் நான் சொன்னபோது அனைவருமே ஒப்புக் கொண்டனர்.


எல்லாவற்றிற்கும் நடுவில் என் திட்டங்களையும் பயிருடன் சேர்ந்து வளரும் களையாகக் கவனித்துக் கொண்டேன்.

வரவேற்பு இதழ்கள் அச்சிடப்பட்டன. கண்காட்சிக்கு ஆறு நாட்கள் இருக்கும்போத சேர்ந்தாற்போல் இரண்டு நாட்கள் பெரு மழை பெய்தது. எனக்குள் மின்னலடித்தது.

பால்கியுடன் தொடர்பு கொள்ள முயன்றேன். அவன் வெளியூர் போயிருப்பதாகவும் மறுநாள் காலையில் வருவான் என்றும் அவன் அப்பா சொன்னார்.

உடனடியாக ஒரு காரியம் செய்தேன்.

# 10



## உன்னைக் கொலை செய்யவும் தயங்கமாட்டேன், ஜாக்கிரதை

மழை ஓய்ந்திருந்தது. என் மனம் மட்டும் ஓயாமல் அலை பாய்ந்து கொண்டிருந்தது. இன்ஜினீயரிங் படித்த ஒருவன், சாதாரண இருவரிடம் மடத்தனமாக ஏமாந்து போனது என் ஈகோவை வெகுவாகப் பாதித்திருந்தது.

இந்த ஒரு வலையிலிருந்து தப்புவதற்குத் தெரியவில்லை என்றால் நான் படித்ததற்கு என்ன அர்த்தம்? இன்ஜினீயரிங் என்பது என்ன, வெறும் கணக்கும், கட்டிடமும், இன்ஜினுமா? அப்ளிகேஷன் ஆஃப் மைண்ட் இல்லையா? முழுக்க முழுக்க மூளையின் முதலீடு இல்லையா?

யோசி. இக்கட்டுகளில் வெல்லத் தெரியாதவனுக்குப் படிப்பு எதற்கு?

பால்கியையும் ரேவதியையும் சரியான முறையில் பழி வாங்க முடியவில்லை என்றால் என்னை நானே மதிக்க முடியுமா? என்னுடைய மூளை கூர்மையானது என்றும் சமயத்துக்குத் தகுந்த மாதிரி திட்டங்கள் தீட்ட வல்லது என்றும் பால்கியே நம்பும்போது நான் நம்பாவிட்டால் எப்படி? என்னுடைய சிந்தனையின் கிரிமினல் பகுதியை பால்கி மாதிரியான ஒரு அயோக்கியனுக்கு

அடிமையாக்கி அதன் மூலம் நானும் அவனுக்கு அடிமையாகி வாழ்வது தேவைதானா? அதற்குப் பதில் அந்த சிந்தனையை என் நிரந்தர விடுதலைக்கு உபயோகித்துக் கொண்டால்...?

மெல்ல எழுந்தேன்.

ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தப்படி எனக்கும் ரேவதிக்கும் நட்பு வழிப் பழக்கம் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. பால்கி ஊரில் இல்லை என்று தெரிந்து கொண்டவுடன் ரேவதிக்கு பேஜரில் செய்தி அனுப்பினேன், என்னை பால்கியின் அறையில் உடனடியாகச் சந்திக்கும்படி.

சில விஷயங்களை வாங்குவதற்கு என்று பஜார், அங்கே இங்கே என்று கூறிவிட்டு பால்கியின் பிரைவேட் ரூமுக்குப் போனபோது அங்கே காத்திருந்தாள் ரேவதி.

நான் உள்ளே நுழைந்ததும், "என்ன பாரதி சார்?" என்று கேட்டவாறே எழுந்து நின்றாள்.

கதவைத் தாள் போட்டுவிட்டு சட்டென்று பாய்ந்தேன் அவள் மீது. அவள் சற்றும் எதிர்பார்க்காத கணத்தில் அவள் வாயை ஒரு கையால் பொத்திக் கொண்டு மறு கையால் என் பையைத் திறந்து கத்தி ஒன்றினை எடுத்து அவள் கழுத்தில் வைத்தேன்.

"இப்போ உன் வாயிலிருந்து கையை எடுக்கப் போகிறேன். சத்தம் போட்ட, இந்தக் கத்தி உன் கழுத்தில் இறங்கும். எப்படியும் என் மீது ஒரு கொலைப் பழி இருக்கிறது. பரவாயில்லை என்று உன்னைத் தீர்த்துவிடுவேன். உன்னைத் தூக்கில் தொங்கவிட்டுவிடுவேன். நீ ஏற்கெனவே எனக்கு எழுதிய கடிதம் என்னிடம்தான் பத்திரமாக உள்ளது. உன் மரணத்தை தற்கொலையாக அறிவிக்க, அதுஒன்றே போதுமானது. புரிகிறதா?"

அவள் கண்களில் அதீதமாய் பயம் தெரிந்தது.

கையை எடுத்தேன். அவள் கண்களில் நீர் நிரம்பி வழியத் தொடங்கியது.

"நீங்க அந்தக் கடிதத்தைக் கிழித்து எரிக்கலியா?" என்று கேட்டாள் நடுங்கிய குரலில்.

"உன் மீதான மயக்கத்தில் எல்லாவற்றையும் செய்த நான் தெய்வாதீனமாக செய்யாமல் விட்ட ஒரே விஷயம் அதுதான். அது கூட உன் மீதான சந்தேகத்தினால் அல்ல. உன் கடைசி எழுத்தை என் கடைசி காலம் வரையில் பார்த்துப் பார்த்து ஏங்குவதற்காக, அந்த அளவிற்கு உன்னை நேசித்த மடையனாக அல்லவா இருந்து தொலைத்தேன்"

அவள் கண்களில் பெருகி வழிந்த நீர் என் வார்த்தைகளாலா அல்லது வேறு பயத்தினாலா என்று யோசிக்கும் நிலையில் இல்லை நான்.

"சொல், உன் காதலன் அந்த போட்டோக்களையும் நெகட்டிவ்களையும் எங்கே வைத்திருக்கிறான்?"

அவள் ரொம்பவும் தயங்கினாள். என் கத்தியின் அழுத்தமும் என் கண்களில் தெரிந்த கொலை வெறியும் அவளைப் பேச வைத்தன.

"அங்கே..." தலைக்கு மேலே இருந்த ஸ்லாப்பைக் காட்டினாள். "சூட்கேஸ் ஒண்ணு இருக்கு. அதில் தான் முக்கியமான எல்லாமே வைத்திருப்பார்"

"தூக்கி விடறேன், எடு" என்று அவளைத் தூக்கிவிட்டேன். எடுத்தாள். கொஞ்சம் தூசு படிந்து இருந்தது. அதைக் கட்டிலின் மீது வைத்துவிட்டு அங்கிருந்த கைலி ஒன்றை எடுத்து அவள் கைகளைக் கட்டினேன். கட்டிலின் மேல் அவளைத் தள்ளிவிட்டு சூட்கேஸை உடைக்கும் முயற்சியில் ஈடுபட்டேன்.

அடுத்த ஐந்தாவது நிமிடம் அந்த போட்டோக்களும் நெகட்டிவ்களும் என் கையில் இருந்தன. எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டேன். எனக்கும் பால்கியின் கறுப்பு நடவடிக்கைகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டாக்கும் வண்ணமான சான்றுகள் எதுவும் இருக்கிறதா என்று தேடிப் பார்த்து திருப்தி அடைந்தேன்.

ரேவதியின் பேஜரைப் பிடுங்கி என் மெசேஜை அழித்தேன்.

"பாரதி சார்! நீங்க சொன்ன எல்லாவற்றையும் மறுப்பு இல்லாமல் செஞ்சிட்டேன். என்னை ஒண்ணும் பண்ணிடாதீங்க சார். எனக்கு எதுவுமே தெரியாது. எல்லாமே அந்த பால்கி செஞ்சதுதான். அவன் சொன்னதைத்தான் நான் செஞ்சேன். அதுவும் அவனுடைய மிரட்டலுக்கு பயந்து, உங்களோட பழகிய நாட்கள் உங்களோட தூய்மையான அன்பில் நான் மயங்கியது நிஜம். ஆனா பால்கியை மீறி நான் ஒன்றும் செய்ய முடியாது. அவனிடம் என் மானம் அடங்கிய சில ரகசியங்கள் இருக்கு. நான் அவனுடைய சூழ்நிலைக் கைதி சார். என்னை மன்னிச்சிடுங்க சார்..."

ரேவதி பேசிக் கொண்டே போக எனக்கு அடுத்து என்ன செய்ய வேண்டும் என்கிற க்ளூ அவளிடமிருந்தே கிடைத்தது.

"பாரதி சார்! ப்ளீஸ் என்னை ஒன்றும் செஞ்சிடாதீங்க"

சிரித்தேன்.

"நான் சொல்றதெல்லாம் செய். அப்புறம் பார்க்கலாம்", என்றவனாக அவளுடைய கட்டுகளை அவிழ்த்து விட்டு ஒரு தாளையும் பேனாவையும் நீட்டினேன்.

"நான் சொல்லச் சொல்ல எழுது"

வாங்கி எழுதத் தொடங்கினாள், நடுங்கும் கரங்களுடன்.

"பால்கிக்கு,

உன் கூடப் பேசுவது கூடப் பாவம் என்று இப்போது தானே தெரிகிறது. உன்னையும் நல்லவன் என்று நம்பிப் பழகுகிறாரே பாரதி சார், அவருக்கே துரோகம் நினைக்கிறாயே, நீ உருப்படுவாயா? உன்னைக் கை எடுத்துக் கும்பிட்டுக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து என் வழியிலிருந்து விலகிவிடு. என்

கடந்த கால வாழ்வில் ஒரே ஒரு முறை நான் சோரம் போனவள்தான். ஆனால அதை எல்லாம் மறந்து பாரதி சாருடன் தூய்மையான காதலுடன் பழகி வருகிறேன். என் கடந்த கால வாழ்க்கையைப் பற்றி அவரிடம் சொல்லிவிடுவதாக மிரட்டி மிரட்டியே என்னை இன்னும் எவ்வளவு காலத்துக்கு அடிமையாக வைத்திருக்கப் போகிறாய்? நீ ஒரு நல்ல பாம்பு என்று அறியாமல் எங்கள் குடும்ப நண்பன் என்று என் வீட்டாரும் உனக்கு மரியாதை தந்து பழகுகிறார்கள். அதை ரொம்பவும் மிஸ்யூஸ் பண்ணாதே. ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள். உனக்கும் ரூபச்சந்திரனுக்கும் ஏராள கெட்ட தொடர்புகள், அதன் தொடர்ச்சியாக நீ ஏன் அவரைக் கொன்றாய் முதலான சகல விவரங்களும் எனக்குத் தெரியும். இனியும் என் வழியில் நீ குறுக்கிட்டால் நான் போலீஸுக்குப் போக வேண்டி வரும். என் பொறுமைக்கும் எல்லை உண்டு. என் வாழ்க்கையே பாழாகும் என்கிற பட்சத்தில் உன்னைக் கொலை செய்யவும் தயங்கமாட்டேன், ஜாக்கிரதை.

– ரேவதி

கை நடுங்கியது ரேவதிக்கு.

"பாரதி சார்! என்னை என்ன செய்யப் போறீங்க? ஒண்ணுமே புரியலை"

கடிதத்தை பத்திரமாக வாங்கி மடித்து வைத்துக் கொண்டு ஆயாசமாய் உட்கார்ந்தேன்.

"ஏதாவது பேசுங்க சார்..." என்றாள் பயத்துடன்.

அவளையே வேடிக்கை பார்ப்பது போல் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் என்னுடன் ஆடிய காதல் நாடகக் காட்சிகள் மனதுக்குள் படமாக ஓடின.

"என்ன சார் பண்ணப் போறீங்க?"

"உன்னை என்னவெல்லாம் செய்திருக்க முடியும் என்று யோசித்துப் பார்க்கிறேன். என்னை எப்படியெல்லாம் ஆட்டி வைத்திருக்கிறாய் என்று யோசித்துப் பார்க்கிறேன்"

அவள் அமைதியாக இருந்தாள்.

"என்னவெல்லாம் கற்பனை செய்ய வைத்திருந்தாய் தெரியுமா? என் பாட்டுக்கு என் சம்பளம் உண்டு வீடு உண்டு, என்று இருந்தவனின் மனதில் வலிய வலிய வந்து பழகி காதல் உணர்வுகளைத் தோற்றுவித்து, வெறும் காதல் பேச்சுகள் மட்டும் பேசாமல் என் அம்மா மற்றும் தங்கைகள், அவர்களுடைய படிப்பு, உடல்நிலை எதிர்காலம் பற்றியெல்லாம் அக்கறை காட்டுவது போல் பேசி உன்னால் மட்டுமே என் எதிர்காலம் சிறப்பாக அமைய முடியும்; நீ என் மனைவியாக வாய்த்தால் மட்டுமே என் தங்கைகளுடன் வாழ்நாள் முழுதும் சுமுக உறவை வைத்திருக்க முடியும்; குடும்பத்தில் விரிசல் வராமல் இருக்கும் என்றெல்லாம் என்னை நம்ப வைத்துக் கழுத்தறுத்திட்டியே. உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. நான் அவ்வளவு

பலவீனமாக பாசத்துக்கு ஏங்கியிருக்கிறேன். அந்த மடத்தனத்துக்கு இதுவும் வேண்டும்; இன்னமும் வேண்டும்"

என் கண்கள் பொங்குவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

"சார்! சத்தியமா சொல்றேன் சார். நான் நாடகமாகத்தான் உங்க மேல காதல் வந்த மாதிரி நடிக்க ஆரம்பிச்சேன். ஆனா கொஞ்ச நாளிலேயே உங்க மேல நிஜமாகவே காதல் வந்திடுச்சு. நீங்க உங்க குடும்பத்தைப் பற்றிச் சொல்லும்போதெல்லாம் நானும் அந்தக் குடும்பத்தில் ஓர் அங்கமாக ஆகிவிடக் கூடாதா என்று கடவுளை வேண்டியிருக்கிறேன். பல நாட்கள் தனிமையில் அழுதிருக்கிறேன். ஒரு கட்டத்துக்கு மேல் என்னால் தொடர்ந்து நடிக்க முடியவில்லை; என்னை விட்டுடுன்னு பால்கியிடம் சொல்லியிருக்கிறேன். அவன் சம்மதிக்கவில்லை. தொடர்ந்து மிரட்ட ஆரம்பிச்சான். பால்கி மாதிரியான சந்தர்ப்பவாதிக்குக் கைதியா இருந்து வாழறதுக்கு பதிலா உங்களை மாதிரியான நல்லவருக்கு உண்மையான காதலியா இருந்து சாகலாமேனு கூட நினைச்சதுண்டு. ஆனா பால்கி அதற்கும் விடமாட்டானே. என்னுடைய பழைய சங்கதியைச் சொல்லி உங்க மனசில் இருந்தும் என்னைப் பிரிச்சிடுவான்னு தெரியும். அதனால்தான் இந்த ஜென்மத்துக்கு நான் கொடுத்து வைத்தது இவ்வளவுதான்னு என்னையே நொந்துகிட்டு அவன் சொல்படி தொடர்ந்து ஆட ஆரம்பிச்சேன்"

"ஒரு வேளை மாட்டிக்கிட்டா இந்த மாதிரி எல்லாம் பேசிப் பார்க்கச் சொல்லியும் அவன்தான் சொல்லிக் கொடுத்தானா?"

"ஐயோ! உங்களுக்கு எப்படி சார் புரிய வைப்பேன். தன் கூட கண்ணியமா பழகுகிற எந்த ஆம்பளை மேலும் ஒரு பெண்ணுக்கு இயல்பாகவே ஈடுபாடு வந்திடும் சார்"

"இந்த மாதிரி உருகிப் பேசற பெண்ணின் மீது எந்த ஆம்பளைக்கும் சபலம் வந்திடும். இதெல்லாம் உங்க கபட நாடகங்களுக்கு பால பாடம் இல்லையா?" என்றேன் காட்டமான குரலில்.

ரேவதி கொஞ்ச நேரம் ஒன்றும் பேசாமல் இருந்தாள்.

"என்னை விட்டுடுங்க சார்! தெரியாமல் பண்ணிட்டேன். இந்த சங்காத்தங்களே வேண்டாம். நானே அறிந்து ஒரு தப்பு பண்ணினேன். அது சம்பந்தமான விவரங்கள் பால்கி கையில். நான் தற்கொலை செய்து கொண்டதாக எழுதிய கடிதம் உங்கள் கையில். போதாக் குறைக்கு இப்போ கொலையும் செய்யப் போறதா ஒரு கடிதம் எழுதி வாங்கி இருக்கீங்க. எனக்கு இனிமேல் வாழ்க்கைல நிம்மதின்னு ஏதாவது இருக்க சான்ஸே இல்லை. நான் என்ன செய்யட்டும்..." என்று சுவரில் முட்டிக் கொண்டு அழுதாள்.

"ஓ.கே. இங்கே இப்போ நடந்ததை யாரிடமும் மூச்சுவிடக் கூடாது. சரியா? உன் மீதான நேசத்தின் மிச்சம் இன்னும் என் மனதின் ஓரத்தில் எங்காவது இருக்கிறதா என்று பார்க்கிறேன்"

கண்களில் நம்பிக்கையுடன் நிமிர்ந்தாள்.

"ஏதும் சொல்மாட்டேன் சார். எனக்கு ஒண்ணும் வராதே..."

என்னிடம் எவ்வளவு பொய் சொல்லி இருக்கிறாள்; இவளிடம் ஒரு பொய் சொன்னால்தான் என்ன?

"பார்க்கலாம். அது நீ காக்கின்ற அமைதியைப் பொறுத்தது"

"அப்போ அந்தக் கடிதங்கள்..."

சிரித்தேன். "உங்க பாஷையிலேயே சொல்லணும்னா, நமக்குள்ள ஸ்டிராங்கா ஒரு பைண்டிங் வேணுமிலையா?" என்று எழுந்தேன்.

இந்தக் கடிதத்தை பால்கியிடம் எப்படிச் சேர்க்கப் போகிறேன்?

"நீ நாளை மாலை ஐந்து மணி வாக்கில் எங்க காலேஜ் வாட்டர் டாங்க் பக்கத்தில் வந்து நிக்கணும். செய்வியா?"

"வர்றேன் சார். வந்தா..."

"உன்னை பால்கி பிளாக் மெயில் செய்யும் சான்றுகள், உன்னுடைய இரண்டு கடிதங்கள் எல்லாவற்றையும் உன்னிடம் தந்துவிடுகிறேன்..."

"நிஜமாகவா?"


"எஸ். ஆனா ஒரு கண்டிஷன். நீ அங்கே நிக்கும்போது உன் கால்களில் செருப்பு இருக்கக் கூடாது"

"நீங்க சொன்னா இப்போ காலே கூட இல்லாம நிக்கத் தயாரா இருக்கேன் சார்"

சிரித்தேன்.

"உன் செருப்புகளைக் கொடு" என்றேன்.

# 11



## இப்படி ஒரு ஆண்டிக்ளைமாக்ஸ் முடிவா?

**கா**லை அவசரமாக எழுந்து குளித்துத் தயாரானேன். சீக்கிரம் போகாவிட்டால் பால்கி எங்கும் போய்விடுவான். அவனைப் பிடிப்பதே பெரிய பாடாக இருக்கிறது.

கிளம்பி நேராக பால்கியிடம் போனேன். அவன் அன்று காலைதான் ஊரிலிருந்து வந்திருப்பான் போலும். கொஞ்சம் களைப்பாகத் தென்பட்டான்.

"வாடா" என்றான்.

''ஒன்றுமில்லை. உன்னை என்னுடன் காலேஜுக்கு அழைத்துச் சொல்லலாம்னு பார்த்தேன். நீ ரொம்பக் களைப்பாகத் தெரிகிறாய். நாளைக்குப் போகலாமா?"

"ஏதும் முக்கிய விஷயமா?"

சுற்றிலும் ஒருமுறை பார்த்துக் கொண்டு குரலைத் தாழ்த்தி "பிளான்" என்றேன்.

சட்டென்று சுறுசுறுப்பானான். "பத்து நிமிடத்தில் தயாராகிவிடுகிறேன். பொறு" என்றான். வேகமாகத் தயாரானான். "வா, போகலாம். ஆனால் இன்னிக்கு விடுமுறை தினமாச்சே" என்றபடியே கிளம்பினான்.

"அதனால்தான் இன்னிக்குக் கூட்டிப் போறேன். கல்லூரியில் அனாவசியமா கூட்டம் இல்லாமல் இருக்கும். கண்காட்சி திடலுக்கான வேலைகள் நடந்திட்டிருக்கும். அது சம்பந்தப்பட்டவங்களைத் தவிர வேறு யாரும் இருக்கமாட்டாங்க. நாம் ஃப்ரீயாப் பேசிக்க முடியும்" என்றேன்.

வழியில் ஏதும் பேசிக் கொள்ளவில்லை இருவரும்.

கல்லூரி வெறிச்சோடிக் கிடந்தது. இங்கொன்றும் அங்கொன்றுமாக மிகக் குறைந்த அளவிலேயே மாணவர்கள் தென்பட்டனர். பால்கி முதன்முறையாக இங்கு வருகிறான் என்பதால் அதிசயமாக வெறித்தபடி வந்தான்.

"இது தான் என்னுடைய லேப். என்னுடைய அறை இருப்பது இங்கே தான்", என்றபடி நானே சாவி போட்டுப் பூட்டைத் திறந்தேன்.

"உனக்குன்னு ப்யூன் மாதிரி யாரும் கிடையாதா, இப்படி கதவு திறக்க அல்லது தண்ணி காஃபி டீ எதுவும் வேணும்னா வாங்கித் தர?" என்று கேட்டான் பால்கி.

"இன்னிக்கு லீவு இல்லையா? அதனால் எங்க அட்டண்டர் மெதுவா மனம் போல வருவான். நானும் ஒன்றும் சொல்வதில்லை"

இருவரும் என் அறைக்குள் நுழைந்து எதிரெதிர் இருக்கைகளில் அமர்ந்தோம். பால்கியின் முகம் தீவிரமாக இருந்தது.

"ம்.. சொல்லு"

கண்ணாடிக் கதவு. வெளிச்சத்தம் உள்ளேயோ, உள் சத்தம் வெளியேயோ கேட்க வாய்ப்பே இல்லை.

"உன்னை எதுக்குக் கூட்டிட்டு வந்தேன் தெரியுமா?"

"ஏன்?"

"கொஞ்சம் பணத் தேவை. எனக்குப் பேசிய பணத்தில் கொஞ்சம் தர முடியுமா?"

பால்கி புன்னகையுடன் பார்த்தான்.

"இப்படி நம்பிக்கை இல்லாமல் பார்ப்பாய் என்று எனக்குத் தெரியும். அதனால்தான் இங்கே கூட்டி வந்தேன். திட்டம் முழுதும் விளக்கிச் சொல்றேன். கேள். சொன்னதைச் செய்து காட்டுவேன் என்று நம்பிக்கை ஏற்பட்டால் மட்டும் அட்வான்ஸ் கொடு. சரியா?" என்று ஆரம்பித்து மெல்ல மெல்ல திட்டங்களை விவரித்தேன்.

கேட்கக் கேட்க பால்கியின் கண்கள் விரிந்தன. முகத்தில் மகிழ்ச்சியின் சாயல் பரவிக் கொண்டே வந்தது.

கடைசியில், "ஃபண்டாஸ்டிக் பாரதி! யூ ஆர் பிரில்லியண்ட்..." என்று கை குலுக்கினான். என் எதிர்பார்ப்பை விடவும் உன் மூளை ஷார்ப். அட்வான்ஸ் என்ன, பாதித் தொகையே கூட உனக்கு நாளை வாங்கித் தருகிறேன்" என்றான் குரலை உயர்த்தி.

"நாளையா? இன்னிக்கு சாயங்காலத்துக்குள் ஏற்பாடு பண்ண முடியாதா?"

பால்கி ஒரு வினாடி யோசித்தான்.

"அவ்வளவு அவசரமா?"

"எஸ். இப்போ உனக்கு விவரிச்சேனே அந்தத் திட்டத்தில் நான் சொன்ன மாதிரி மாற்று சர்க்யூட் செஞ்சு வைக்கணும்னா செலவு செய்ய வேண்டியிருக்கே. என்னிடம் கையில் காசு கிடையாது என்று உனக்கே தெரியும்..."

"ரைட். டன். சாயங்காலம் எப்போ வேணும்? உன் வீட்டுக்கு வந்து தரவா?"

"வேண்டாம். இங்கேயே வா. இங்குதான் இருப்பேன். நாலரை மணி வாக்கில் வா"

"ஓ.கே."

வாசலில் கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் இரண்டு மாணவர்கள் வருவது தெரிந்தது.

"எஸ்" என்று வரவேற்றேன். வட இந்திய மாணவர்கள். அவர்கள் அமைக்க வேண்டிய சர்க்யூட் பற்றிய சில சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவு பெற்றுச் சென்றார்கள்.

"இவர்கள் தானா நீ சொன்ன அந்த இரண்டு பேர்?" என்று கேட்டான் பால்கி.

"ம்" என்று சிரித்தேன். "பழி இவர்கள் மீது விழுகிறதோ இல்லையோ ஒரு டைவர்ஷனுக்கு வேண்டும் என்பதால்தான்..."

"அதான் முதலிலேயே சொல்லிவிட்டேனே யூ ஆர் பிரில்லியண்ட் என்று", என்ற பால்கி, "சம்பவம் நடக்கப் போற இடத்தைப் பார்க்கலாமா?" என்று எழுந்தான்.

"ஷ்யூர்", என்று உடன் எழுந்தேன்.

இருவரும் வெளியே வந்தோம். மெல்ல நடந்தோம். தொலைவில்

மைதானத்தில் கொட்டகைகள் மற்றும் மேடைகள் போடும் பணிகள் நடந்து கொண்டிருந்தன.

நடந்து அந்த இடத்தை அடைந்தோம்.



ஒவ்வொரு ஸ்டாலாக அவனுக்கு அமைக்கப்பட இருக்கும்விதம் பற்றிச் சொல்லிக் கொண்டே வந்தேன். சற்றுத் தள்ளி ஒதுக்குப் புறமாக டாய்லெட் மற்றும் பாத்ரூம் இருந்தது.

அதைப் பார்த்ததும், "வா போகலாம். ரொம்ப நேரமா இதைத்தான் தேடிட்டிருந்தேன்" என்று பரபரத்தான்.

எனக்கு சிரிப்பு வந்தது.

"நீ போயிட்டு வா. நான் அந்த சூபர்வைசரிடம் ஒன்று கேட்க வேண்டியிருக்கிறது" என்று அவனை உள்ளே அனுப்பிவிட்டு நான் சூபர்வைஸர் இருந்த பக்கமாக நடக்கத் தொடங்கினேன். அவர் எனக்கு முதுகு காட்டியபடி நின்றிருந்தார்.

**மா**லை என்னுடைய அறையில் தனியே அமர்ந்து புத்தகம் ஒன்று படித்துக் கொண்டிருந்தேன். இடையிடையே கைக் கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டேன். வானம் இன்னும் கூட கொஞ்சம் மப்பும் மந்தாரமுமாகத்தான் இருந்தது. கல்லூரி வளாகத்தில் காலையில் இருந்த அளவு கூட மக்கள் நடமாட்டம் இல்லை. வெறிச்சென்றிருந்தது. நான் மட்டும் பால்கியை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

என்னுடைய சட்டைப் பையில் ரேவதி எழுதிக் கொடுத்துள்ள கடிதம் உறுத்திக் கொண்டிருந்தது. பேண்ட் பாக்கெட்டில் அந்தக் கத்தியும் உறுத்திக் கொண்டிருந்தது. ஒரு விதக் குரூரப் புன்னகையுடன் அமர்ந்திருந்தேன். கவனம் படிப்பில் செல்லவில்லை. இருக்கையை விட்டு எழவும் மனமில்லை.

மனதுக்குள் திட்டங்கள் தெளிவாக ஓடிக் கொண்டிருந்தன.

பால்கி வருவான். அவனிடம் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டு எப்படியாவது அவனிடம் இந்தக் கடிதத்தைச் சேர்த்துவிட வேண்டும். 'இதில் அடுத்த இரண்டு நாட்களில் நீ என்னென்ன செய்ய வேண்டும் என்று எழுதி இருக்கிறேன்; வீட்டில் போய் நிதானமாகப் படித்துப் பார்த்துவிட்டு எரித்துவிடு' என்று சொல்லிக் கொடுத்தால் வாங்கிப் பையில் வைத்துக் கொள்வான். அப்புறம்? மெல்ல அவனுடன் பேசிக் கொண்டிருந்தபடியே வெளியே கிளம்பி கண்காட்சி மைதானத்தின் பக்கமாகக் கூட்டிச் செல்ல வேண்டும். அங்கே கொஞ்ச நேரம் நின்றிருந்தால் பாத்ரூம் போகும் மூடு தானாகவே வந்துவிடும். அங்கே போய் யாரும் இல்லை என்பதை மட்டும் உறுதி செய்து கொண்டு கத்தி எடுத்து அவனுடைய கழுத்தில் ஓர் இழுப்பு இழுத்துவிட வேண்டியதுதான். எப்போதோ பள்ளியில் படித்திருக்கிறேன் ஏர் எம்போலிஸம் என்று. கழுத்தின் குறிப்பிட்ட இடத்தில் வெட்டுப்பட்டால் காற்று நேரடியாக இதயத்துக்குள் நுழைந்து சாவு வெகு சீக்கிரமே சம்பவித்து விடுமாம்.

பால்கி! உனக்கு இப்படித்தான் முடிவு.

ஏற்கெனவே பாத்ரூமுக்குப் பின் பகுதியில் சகதியும் ஈரமுமாக இருக்கும்

முள்காட்டினுள் ரேவதியின் செருப்புகளைச் சேற்றில் அழுத்தி எடுத்துப் போட்டாகிவிட்டது. அந்தக் கத்தியையும் அங்கே வீசி எறிந்துவிட்டால் தடயம் தேடும் போலீஸாருக்கு வேலை எளிதாகிவிடும். ஐந்து மணி வாக்கில் ரேவதியும் அந்த தண்ணீர்த் தொட்டி பக்கத்தில் கொஞ்ச நேரமாவது காத்திருந்து விட்டுச் செல்வாள். அவள் கொலை நடந்த சமயத்தில் இந்த ஏரியாவில் தான் இருந்தாள் என்பதற்கு ஏதாவது சாட்சி இயற்கையாகவே இல்லாமலா போய்விடும். தேவைப்பட்டால் நானே சொல்லிட்டுப் போகிறேன்.

பால்கியின் பிணம், அவனுடைய சட்டையில் இருக்கும் ரேவதியின் கடிதம், அவன் என்னிடம் ரேவதியைப் பற்றிச் சொல்லத்தான் வந்தான் என்பதால் ஆத்திரம் அடைந்த ரேவதி அவனுக்குப் பின்னாலேயே வந்து கெஞ்சிப் பார்த்திருக்கிறாள். அவன் கேட்காமல் போகவே கொன்று விட்டு பின்புறமாக ஓடி இருக்கிறாள். ஓடத் தடையாய் இருந்த செருப்புகளைக் கழற்றி வீசிவிட்டு ஓடிவிட்டாள்.


க்ளியர் கேஸ்!

ஒரே கல்லில் இரண்டு மாங்காய். பால்கியையும் பழி வாங்கியாச்சு. உடன் இருந்த சதிகாரிக்கும் தண்டனை கொடுத்தாச்சு.

காத்திருந்தேன்.

எனக்குள் தொடர் காட்சிகள் ஓடத் தொடங்கின.

# 12



## இந்த முறை நிஜமாகவே

கூட்டத்தை இடித்துத் தள்ளிக் கொண்டு உள்ளே பாய்கின்ற நான், சட்டென்று நிலை குத்தி விழி பிதுங்கக் கிடந்தவனைப் பார்த்து, “பால்கீ...” என்று வீறிடுவது, அந்தப் பிராந்தியத்தை இன்னும் ஒரு முறை திடுக்கிட வைக்கிறது.

என்னை சக ஆசிரியர்கள் சூழ்ந்து அணைப்பாய்ப் பிடித்துக் கொள்ள, போலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் பாத்ரூம் வாசலில் இருந்து பால்கியின் உடலை வெளியே எடுத்துக் கொண்டு வந்து போடுகிறார்கள்.

அவனுடைய கழுத்தில் ஆழமான ஒரு கத்திக் கீறல். அலறக் கூட சந்தர்ப்பம் இல்லாமல் இறந்து போயிருக்கிறான். கண்கள் இமை மூடாமல் நிலை குத்தி

இருக்கும் போதே உயிர் போயிருக்க, வலியின் வேதனையைக் கொஞ்சமாய் முகத்தில் படர விட்டிருந்தபடி இறந்திருக்கிறான். கழுத்துப் பகுதியிலிருந்து வழிந்திருந்த ரத்தம் சட்டையின் மேற்பகுதியைச் சுத்தமாக நனைத்திருக்கிறது.

ஒரு நிமிடம் அவன் எனக்குச் செய்திருந்த எல்லா அக்கிரமங்களையும் மீறி இரக்கம் வருகிறது. பாவம்! எத்தனை கற்பனைகளையும், ஆசைகளையும் மனம் நிறைய வைத்திருந்தான்!

"கொஞ்ச நேரம் முன்னால் முழுதாக என்னோடு பேசிக் கொண்டிருந்தானே சார்", என்று கதற முயல்கிறேன், என்னைப் பிடித்துக் கொண்டிருந்த ஆசிரியர்களிடமிருந்து திமிறியபடி.

"யார் முதலில் எப்படிப் பார்த்தார்களாம்?" என்று கூட்டத்தில் யாரோ யாரிடமோ கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

"வேலை பார்த்திட்டிருந்த கூலியாள் ஒருத்தன் பாத்ரூம் போவதற்காக உள்ளே போயிருக்கிறான். இவர் இறந்து கிடப்பதைப் பார்த்ததும் சத்தம் போட்டுட்டே வெளியே ஓடி வந்திருக்கான். தைரியமான நாலு பேர் போய் பாடியை வெளியே தூக்கிட்டு வந்திருக்காங்க..."

"போலீஸ் கேஸ் ஆச்சேய்யா! பாடில ஏன் கையை வச்சீங்கன்னு சத்தம் போடப் போறாங்க..."

"அந்துப் பயம் வந்ததும் தான் வாசலிலேயே வச்சுட்டாங்க. உள்ளே இருட்டா இருந்ததால யாருன்னாவது பார்க்க வேண்டாமா? வெளியே எடுத்து வந்தப்புறம்தானே ஆள் இறந்தாச்சுன்னே தெரிஞ்சுது"

"பிரின்ஸிபாலுக்கு சொல்லிவிட்டாச்சா?"

"ம்.. வந்திட்டிருக்கார்"

"இவர்..." என்ற இன்ஸ்பெக்டர் பிரசாத் என்னைப் பார்க்கிறார். "ஹலோ! மறுபடியும் நீங்களா?" என்கிறார்.

பதிலுக்கு மெதுவாய்ப் புன்னகைக்கிறேன்.

"நீங்கள் எங்கே இங்கே?" என்கிறார்.

"இவன் என் ஃப்ரண்ட் சார்"

புருவங்களைக் கேள்விக்குறியாய் உயர்த்துகிறார்.

"உங்க ஃப்ரெண்டா? இங்கே எதற்கு வந்தார்?"

"நான் தான் சார் கூட்டிட்டு வந்தேன்"

என்னை அவர் பார்த்த பார்வையில் சந்தேக ரேகைகள்.

அதே சமயம் ஒரு கான்ஸ்டபிள் ஓடி வருகிறார்.

"சார்! பாத்ரூமுக்குப் பின்னால் முட்செடிகளுக்கு நடுவே யாரோ ஓடிப் போயிருக்கிற தடம் இருக்குது. ஒரு செருப்பும் கிடந்தது சார்..." என்று லத்தியில் பிடித்து எடுத்து வந்த செருப்பை அங்கே போடுகிறார்.

மூச்சை நிதானமாக விட ஆரம்பிக்கிறேன்.

"கொஞ்ச நேரத்துக்கு முன்னால் ஒரு பொண்ணு ரொம்ப நேரமா அந்தப் பக்கம் வாட்டர் டாங்க்காண்ட நின்னுட்டிருந்தது சார்" என்று தொடர்ந்த விசாரணையின்போது சொல்கிறான் ஓர் ஆள்.

கல்லூரிக்கான பொது தண்ணீர்த் தொட்டி. பாத்ரூம் கட்டடத்துக்குப் பின்புறம் நூறடி தூரத்தில் உள்ளது.

"அந்தப் பொண்ணு கால்ல கூட செருப்பு இல்லேன்னுதான் சார் நினைக்கிறேன்.." என்று மற்றொரு சாட்சியும் கிடைக்கிறது.

இன்னொரு ஜீப் வந்து நிற்க, ஃபோரன்ஸிக் லாபரட்டரி ஆட்கள் இறங்குகிறார்கள். பிரின்ஸிபால் மற்றும் சக ஆசிரியர்கள் கூடிவிட, பிரின்ஸிபாலின் முகத்தில், 'என்னடா இது, எல்லா தொல்லைகளும் இந்தக் காம்பஸைச் சுற்றியே வருது' என்கிற சலிப்பும் எரிச்சலும் தெரிகின்றன.

அரை மணி நேரம் சல்லடையாகத் தேடுகிறார்கள். எங்கெங்கோ பவுடர் அடித்துப் பார்க்கிறார்கள்.

பின்புற முட்பகுதியிலிருந்து சற்றுத் தள்ளி மழைச் சகதியில் மூழ்கியிருந்த இன்னொரு செருப்பையும் எடுத்து வருகிறார்கள். கத்தி ஒன்றும் எடுத்து வரப்படுகிறது.

"இது யார் செருப்புன்னு தெரியுமா?" என்று பிரசாத் என்னிடம் கேட்க, என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் தயங்குகிறேன்.

"சார்! இறந்து போயிருப்பவனின் சட்டைப் பையில் சில பேப்பர்கள் இருக்கு"

எனக்கு குப்பென்று வியர்க்கிறது.

பிரசாத் என்னிடம் இருந்து திரும்பி, கர்சீஃப் போட்டு அந்தத் தாள்களை உருவுகிறார்.

தீவிரமாக ஒரு வரி விடாமல் படிக்கிறார்.

"சாரி மிஸ்டர் பாரதி! இனி மறைத்துப் பிரயோஜனம் இல்லை. சொல்லிடுங்க...." என்கிறார்.

இன்னமும் தயங்குகிறேன்.

பிரசாத் என் தோளில் தட்டிக் கொடுக்கிறார்.

"சொல்லுங்க மிஸ்டர் பாரதி! இந்த கடிதத்தில் எல்லாம் தெளிவா இருக்கு. இந்தக் கொலை மட்டுமில்லாமல் ரூபச்சந்திரன் கொலைக்கேஸும் முடிந்த மாதிரிதான். இந்த ரேவதிங்கறது யார்?"

கலங்கிய கண்களுடன் நிமிர்ந்து "என் லவ்வர் சார். ரொம்ப நல்லவ, என்னிடம் இந்த மாதிரி விஷயங்களை அவள் சொன்னதே இல்லை. அவளுடைய வீட்டில் நான் குடியிருந்தேன். இறந்து போன பால்கிதான் அந்த வீட்டைப் பிடித்துக் கொடுத்தான். அவளுடனான பழக்கம் காதலானது. அவள்

அப்பா அதற்கு எதிரா இருந்தார். நான் அந்த வீட்டைக் காலி செய்து விட்டு வந்துவிட்டேன். அப்புறமும் எங்கள் பழக்கம் தொடர்ந்தது. என் தங்கைகளுக்கு திருமணம் முடிந்த பிறகு நாங்கள் திருமணம் செய்து கொள்வதாக இருந்தோம். இவ்வளவு தான் சார் எனக்குத் தெரியும். அவளுக்கும் பால்கிக்கும் இடையில் இப்படி ஒரு சிக்கல் இருப்பது குறித்து அவள் ஒரு கோடி கூடக் காட்டியது இல்லை. தெரிந்திருந்தால் நான் பால்கியிடம் இவ்வளவு நட்புடன் இருந்திருக்கவே மாட்டேன். முட்டாள் பெண். என்னிடம் சொல்லி இருக்கலாம், ஏன் இப்படிச் செய்துவிட்டாள் என்று தெரியவில்லையே...” என்றேன்.

“ஐ யம் சாரி” என்றார். “அவங்க வீட்டைக் காட்டுங்க. போகலாம்”

ஜீப்பில் ஏறுகிறோம்.

ரேவதி வீட்டு தெருவில் எங்கள் ஜீப் நுழையும் போது வாசலில் நின்றிருந்த ரேவதி உள்ளே ஓடுவது தெரிகிறது.

“அந்த வீடுதான் சார்”

கல்லூரியின் முக்கியக் கதவுக் காவலாளி வந்து, “என்ன சார்! வீட்டுக்குப் போகலியா?” என்று ஞாபகப்படுத்திய குரலில் கலைந்தேன்.

என்ன ஆயிற்று?

மணி என்ன? ஆறா? நன்கு இருட்டி விட்டிருந்தது வெளியே.

பால்கி ஏன் வரவில்லை? சுதாரித்துக் கொண்டானா? அவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டதா? ரேவதி அவனிடம் ஏதும் சொல்லி இருப்பாளோ?

அவன் வீட்டில் போனும் கிடையாது. நேரில் தான் போக வேண்டும். சோர்வுடன் எழுந்தேன்.

அறையைப் பூட்டிக் கொண்டு கிளம்பினேன்.

பால்கியின் வீட்டுக்கு முன் ஒரு கூட்டம்.

சம்திங் ராங்?

வேகமாக நெருங்கினேன். உறவுக்காரக் கூட்டம் போல் இருந்தது. என்ன ஆயிற்று? பால்கியின் அப்பாவுக்கு ஏதும்?

“நீங்க யாருங்க?” என்று முதலில் கேட்டுக் கொண்டு அப்புறம் தான் விவரம் சொன்னார்கள்.

“பால்கியைக் கொலை பண்ணிட்டாங்க”

“எங்கே? எப்போ? யாரு?” என்று பதற்றத்துடன் கேள்விகளை அடுக்கினேன்.

“அதை ஏன் கேட்கறீங்க? ஒரு பொம்பளப் புள்ள அதுவும் தூரத்து உறவுக்காரப்புள்ள கொன்னுருக்கு”

“எங்கே?”


அவர்கள் சொன்ன முகவரி ரேவதியின் வீடுதான்.

"அந்தப் புள்ளையைப் போலீஸ் புடிச்சிட்டாங்களா?"

"அவனுக்கு விஷம் கொடுத்திட்டு அதுவும் தூக்கில தொங்கிடுச்சே..."

உறைந்து போய் நின்றேன்.

# 13



**என் பெயருக்கு தபால் ஒன்று வந்தது இறந்து போன ரேவதியிடமிருந்து**

மறுநாள் தினசரிகளை நிரப்பி இருந்தார்கள் ரேவதியும் பால்கியும்.

நேற்று நானாக ரேவதி வீட்டுக்குப் போகாத பட்சத்திலும் போலீஸ் என்னைத் தேடி ஏன் வரவில்லை என்கிற கேள்விக்கு செய்தித் தாள்களில் விடை இருந்தது.

கல்யாணம் செய்து கொள்ள மறுத்த காதலனைக் கொன்று தானும் தற்கொலை செய்து கொண்ட இளம் பெண்ணாக தலைப்புகளில் இருந்தாள் ரேவதி.

நான் ஒரு காலத்தில் குடியிருந்த அறையில் கீழே பால்கி பிணமாகக் கிடக்க, தூக்கில் தொங்கிய நிலையில் ரேவதியின் புகைப்படம் எல்லா பத்திரிகைகளிலும் வெளி வந்திருந்தது.

பால்கி தன்னுடைய உறவினன் மற்றும் காதலன் என்றும் தங்கள் காதல் முற்றிவிட்ட நிலையில் திருமணம் செய்து கொள்ள அவன் மறுப்பதால் அவனைக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்தவதாகவும் ரேவதி விலாவாரியாகப் போலீஸுக்குக் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தான் தொங்கி இருக்கிறாள்.

கொஞ்சம் கலக்கமாக இருந்தது. மனதுக்குள் அவளுடைய பரிதாப முடிவுக்காக வருந்தினேன்.

அன்றைய தபாலில் எனக்கு ஒரு கடிதம் வந்தது.

ரேவதியின் கையெழுத்து.

பரபரப்பாகப் பிரித்தேன்.

**மதிப்பிற்குரிய பாரதி சாருக்கு,**

**உங்கள் ரேவதி எழுதும் கடைசிக் கடிதம்.**

**இது போன முறை எழுதியது போன்ற நாடகக் கடிதம் அல்ல என்று**

இன்றைய செய்தித் தாள்களிலிருந்து தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

நீங்கள் என்னிடமிருந்து கடிதம், செருப்பு முதலான ஐட்டங்களை ...கியதிலிருந்தும், என்னை குறிப்பிட்ட நேரத்தில் ஓரிடத்தில் வந்து நிற்கச் ...னதிலிருந்தும் ஒன்றைப் புரிந்து கொண்டேன்.

எங்கள் இருவரையுமோ அல்லது பால்கியை மட்டுமோ பழி வாங்குவதற்காக ...நா கிரிமினல் திட்டங்கள் போடுகிறீர்கள் என்று தெரிந்தது. வேண்டாம் ...தி சார். நீங்கள் பழைய அப்பாவி பாரதி சாராகவே, அம்மா தங்கைகள் ...டும்பம் என்கிற வட்டத்துக்குள் வளைய வருகிற பாரதி சாராகவே இருங்கள்.

நீங்கள் என் மீது வைத்த உண்மையான காதலுக்கு நான் அருகதையற்றவள். ஆனாலும் தாமதமாகவாவது உங்கள் மீது நான் மையல் கொண்டது நிஜம். அதுவும் தூய்மையானதுதான் என்று உங்களுக்க நிருபிக்க எனக்கு இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. உங்கள் நேர்மையான பாதையில் முள்ளாக இருந்த பால்கியை நிரந்தரமாக நான் விலக்கிவிட்டேன். நானும் விலகிக் கொள்கிறேன். உங்கள் நல்வாழ்வுக்கு என் வாழ்த்துகள். என்னுடைய நிஜமான இறுதி வேண்டுகோள். இந்தக் கடிதத்தையாவது கிழித்து எரித்துவிடுங்கள்.

என்றும் உங்கள் ரேவதி.

என் குடும்பத்தினரின் எதிர்காலத்தை முன்னிட்டு நான் சட்டத்தின் பார்வையில் நிரபராதி என்ற சுதந்திரத்துடன் நடமாடலாம். ஆனால் எனக்கு ஆயுள் தண்டனையை விடக் கொடுமையான தீர்ப்பை ரேவதியின் கடைசி வார்த்தைகளை விட வேறு வார்த்தைகள் கொண்டு எந்த நீதிபதியும் எழுதியிருக்க முடியுமா, என்ன?

(முற்றும்)

அச்சிட்டவர் : பி. வரதராசன். பதிப்பாளர் : பிவி. பார்த்தசாரதி. குமுதம் பப்ளிகேஷன்ஸ் (பி) லிமிடெட் சார்பாக குமுதம் பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட்டில் அச்சிடப்பட்டு 151, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை-10ல் வெளியிடப் படுகிறது. ஆசிரியர்: பி.வி. பார்த்தசாரதி.

கதையில் வரும் பெயர்கள், சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே. எதையும் தபால் மூலமே அனுப்ப வேண்டும். அவற்றைத் திருத்தி அமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.